# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 புரட்டாதி 13 வியாழக்கிழமை (30-09-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 264


## புதுக்குடியிருப்பில் குண்டுவீசியதை இலங்கை அரசு ஒப்புக்கொண்டது

### ஐ. நா. நேற்று அறிவித்தது

நியூயோர்க், செப். 30

புதுக்குடியிருப்பு சந்தைப் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி கிபிர் விமானங்கள் தவறுதலாக மேற்கொண்ட தாக்குதலில் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளதாக ஐ.நா. நேற்று அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலைக் கண்டித்து ஐ.நா. அறிக்கை வெளியிட்டிருந்ததும்—

இந்த விடயத்தில் ஐ. நா. தலையிடுவதை வெளிவிவகாரஅமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் எதிர்த்திருந்ததும்— தெரிந்தவையே.

இந்தத் தாக்குதல் பொது மக்கள் மீது தற்செயலாகவே இடம்பெற்றுள்ளது என்று இலங்கை ஐ. நாவிடம் ஒப்புக் கொண்டுள்ளது என்று ஐ நா. நேற்று அறிவித்துள்ளது.

(இ-3-9)

## தேசிய துணைப்படையின் துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலி!

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, செப். 30

மட்டக்களப்பு களுவன்கேணியில் தேசிய துணைப்படை (ராஸிக் குழு) நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலில் விதவையான வடிவேல் யோகேஸ்வரி [வயது 34], அவரது மகளான நாகேஸ்வரி [வயது 14], தேவன் என்பவர்களே உயிரிழந்தவர்களாவர்.

தேவன் என்பவர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என்றும்—

அவர் கிரனேட்டுடன் வீட்டுக்குள் ஓடியதைக் கண்டு தாங்

(10ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேசுவதற்கு இதுவே சரியான நேரம்!

## காங்கேசனில் அறுவர் மட்டும்

யாழ்ப்பாணம், செப். 30

குடாநாட்டில் கைது செய்யப்பட்டவர்களில் அறுவர் மட்டுமே காங்கேசன் துறைத் தடுப்பு முகாமில் உள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலக அதிகாரி ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு நேற்று அவர் விஜயம் செய்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



இந்த அறிவிப்புக்கள் எல்லாம் தேர்தல் நெருங்குது என்பதற்கு அர்த்தம் பாருங்கோ!

## ஒத்துழைப்பு வழங்க தயார் என்கிறார் ரணில்

கொழும்பு, செப்ரெம்பர் 30

"புலிகளுடன் பேச்சு நடத்த இதுவே சரியான நேரம். ஜனாதிபதி கடிதம் மூலம் என்னிடம் ஒத்துழைப்புக் கேட்டால், முழு ஆதரவையும் வழங்கத் தயாராக இருக்கின்றேன்."

மேற்கண்டவாறு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைக் கூறினார்.

காலியில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் ரணில் பங்குபற்றிய பின்னர் காலியில் இருந்து ரயிலில் 3 ஆம் வகுப்பில் பொதுமக்களுடன் சேர்ந்து பயணம் செய்து கோட்டை ரயில் நிலையம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## லங்கா முடித்த சனியன்று திருமலை புறப்படும்

### பயணிகள் நாளை காங்கேசனுக்கு

யாழ்ப்பாணம், செப். 30

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு 'லங்கா முடித்த' கப்பல் மூலம் நாளை மறுதினம் பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கப்பலில் பயணம் செய்ய ரிக்கெட் பெற்றவர்களை பயண ஏற்பாடுகளுடன் நாளை காலை 8 மணிக்குப் பின்னர் யாழ்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### அரசுக்கு தொடர்ந்து ஆதரவு அளிப்பதா?

## ஜனாதிபதி நாடு திரும்பிய பின் அவருடன் பேசி முடிவு செய்வோம்

### முஸ்லிம் காங்கிரஸ் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 30

"பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எமது கட்சியின் ஆதரவு தேவையா? இல்லையா? என்பது குறித்து ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் அவருடன் பேசி முடிவு செய்ய விருக்கிறோம்"

இப்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை குறித்து கருத்துக் கூறுகையிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அரசுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக எமக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலேயே உடன்பாடு காணப்பட்டது.

ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் அவருடன் நாம் நேரடியாகப் பேசி முடிவு செய்ய விருக்கின்றோம்.

இது விடயத்தில் எவரும் மத்தியஸ்தம் செய்யத்தேவை இல்லை—இப்படி அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

அமைச்சர்களான டி. எம். ஜெயரத்தின, சி. வி. குணரத்ன, கிங்ஸ்லிவிக்கிரமரத்ன ஆகியோர்முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுடன் பேச்சு நடத்தி வந்தமை தெரிந்ததே.

## இனப்பிரச்சினை விவகாரம்:

## கதிர்காமர் கூற்றுக்கு தமிழ்க்கட்சிகள் கண்டனம்

கொழும்பு, செப். 30

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் ஐ. நா. சபையோ அல்லது வேறு எவருமோ தலையிடத் தேவையில்லை என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளியிட்டுள்ள கருத்தை தமிழ்க்கட்சிகள் கடுமையாக சாடியுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர். எல். எவ், ரெலோ ஆகிய அமைப்புக்கள் தனித்தனியாகத் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் அரசு வழங்கிய ஜெனரேட்டர்கள் யாழ். வரும்

யாழ்ப்பாணம், செப். 30

பிரிட்டிஷ் அரசாங்கம் நன்கொடையாக வழங்கியுள்ள ஐந்து ஜெனரேட்டர்கள் அடுத்த சில வாரங்களில் யாழ்ப்பாணம் வந்து சேர விருக்கின்றன.

250 கே. வி. வலுவுடைய இந்த ஜெனரேட்டர்க்ள் கொழும்பு வந்து சேர்ந்துள்ளன என்றும்—

அடுத்து வரும் கப்பல்களில் அவை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் என்றும்— மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்சமயம் மின்சார விநி

(10ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் மோதி சிறுவன் மரணம்

பொலிகண்டிப் பகுதியில் வீதியின் குறுக்கே ஓட முற்பட்ட தாகக் கூறப்படும் ஒன்றரை வயதுச் சிறுவன் அந்தப் பாதையால் வந்த வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்ஸுடன் மோதுண்டு மரணமான பரிதாபகரமான சம்பவம் நேற்றுக் காலை 11 மணிக்கு இடம்பெற்றது.

எட்றிக் றிவிஞ்சன் என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப சிறுவனின் தந்தையான எட்றிக் கடந்த வருடம் இதே இடத்தில் பொலீஸ் ஜீப் மோதி உயிரிழந்திருந்தார் என்று கூறப்படுகிறது.

(இ-3-109)

## நவக்கிரியில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், செப். 30

சுன்னாகம் — புத்தூர் வீதியில் நவக்கிரிப்பகுதியில் நேற்று மாலை 6. 30 மணியளவில் ரோந்து சென்ற படையினர் மீது கிளைமோர் தாக்குதல் ஒன்று இடம்பெற்றுள்ளதாக தெரிய வந்தது.

இந்தத் தாக்குதலில் படையினர் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார் என்றும்—

மற்றும் இருவர் காயமடைந்தனர் என்றும் — முன் கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

முழுமையான சேதவிவரங்கள் நேற்றிரவுவரைகிடைக்கவில்லை.

(இ-3)

## பதுளையில் மின்மாற்றி குண்டு வைத்துத் தகர்ப்பு

### தேடுதலில் பதது தமிழர் கைது

கொழும்பு, செப். 30

பதுளை மாவட்டத்தில் பசறை—மொனறாகல வீதியில் அமைந்திருந்த மின்மாற்றி ஒன்று நேற்றுக்காலை 7. 15 மணியளவில் இனந்தெரியாதோரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இந்தக் குண்டு வெடிப்பால் ஐந்து லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தை அடுத்து தேடுதல் நடத்திய பொலீஸார் பத்துத் தமிழர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பிலிருந்து கப்பலில் விதை உருளைக்கிழங்கு

## இம்முறை தனியாரே எடுத்துவருகின்றனர்

யாழ்ப்பாணம், செப். 30

யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்குச் செய்கைக்கென 150 மெ. தொன் விதை உருளைக்கிழங்கு தனியார் துறையினரால் கொழும்பிலிருந்து கொண்டு வரப்படவுள்ளது.

முதற்கட்டமாக கொழும்பிலிருந்துஅடுத்துவரும் மாகோ கப்பலில் 100 மெ. தொன் விதை உருளைக்கிழங்கு கொண்டு வரப்படவுள்ளது.

அதே சமயம் உருளைக் கிழங்கை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நன்மைகருதி விதை கிழங்கினை ஒக்ரோபர் 20 ஆம் திகதிக்கு முன் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வர வேண்டும் என்று சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கு அறிவிக்க வேண்டுமென மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்தவருடம்கமநலசேவை நிலையத்தினால் கொண்டு வரப்பட்ட விதை உருளைக் கிழங்கு விவசாய சம்மேளனங்கள் ஊடாகவே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்த வருடம் இதனைத் தனியார் துறையினர் எடுத்து வருவதால் விநியோகம் பற்றி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டுமெனவும் விவசாயக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ-5)

## வாழ்த்துகின்றோம்

எம் மண்ணின் மைந்தனும் எமதன்பு ஆசானுமாகிய

**திருவாளர் க. அரசரத்தினம் அவர்கள்**

நெடுந்தீவு கோட்டக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு. இ. கிருபாகரன் (ஆசிரியர்)
திருமதி ச. கிருபாகரன் (ஆசிரியர்)

(69493)

## யா/ கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம்
## சிறுவர் தினம் - 1999

காலம்: 01-10-99 வெள்ளிக்கிழமை மு. ப. 11 மணி

பிரதம விருந்தினர்:

திரு. த. அருணகிரிராஜா
(உதவிக்கல்விப் பணிப்பாளர் – உடற்கல்வி யாழ். வலயம்)

சிறப்பு விருந்தினர்:

திரு. கே. திருநாவுக்கரசு
(உதவிப் பொது முகாமையாளர் – மக்கள் வங்கி வட வலயம்)

சிறுவர் கழகம்,
யா/கனகரத்தினம் ம. ம. வி.

(69487)

## உவப்பொடு வாழ்க!

30 ஆண்டுகளுக்கு மேலாகப் பல்கலைக்கழகச் சேவையில் விரிவுரையாளராக, பேராசிரியராக, கல்வியியல் துறைத் தலைவராக விளங்கி-

இன்று (30–09–99) முதல் சேவையிலிருந்து ஓய்வு பெறும்

**பேராசிரியர் வ. ஆறுமுகம்**

அவர்களை சேவை நலன் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

உயர்வொடு கல்வி யிற்றுறை யோங்கிட
உணர்வுறு பணி பல ஆற்றிய தலைவ,
அயர்வற உழைத்திவ் வெள்ளி விழா வாண்டில்
எம்மையும் பட்டம் பெற்றிட வைத்தீர்
தயவுடைத் தலைவ நீர் தருவென ஓங்கித்
தமிழ்போ லிளமையாய் வாழிய, வாழ்க
பயனுடைப் பணி பல பாரினில் ஆற்றியே
பண்புடை அண்ணலே பல்லாண் டொளிர்க!

— தென்மராட்சிப் பிரதேச
கல்வியியல் துறை பகுதிநேர மாணவர்கள் (1997)

சாவகச்சேரி, (69491)

## கண்ணீரஞ்சலி

எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியையும் எமது பழைய மாணவர் சங்கத்தின் ஆயுள்கால உறுப்பினருமாகிய திருமதி விக்கினேஸ்வரி கந்தையா ஆசிரியையின் துணைவர்

**திரு. வேலாயுதம் கந்தையா**

அவர்கள் 29 – 09 – 99 புதன்கிழமை காலை இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம். அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா / மல்லாகம் மகா வித்தியாலயம்.

(69488)

## 3 இளைஞர்களின் உறவினர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 30

தமது அமைப்பில்இணைந்து கொள்ளவென வந்துள்ள மூன்று இளைஞர்களையும் வந்து அழைத்துச் செல்லுமாறு அவர்களது உறவினர்களை ஈ.பி.டி.பி.அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் வி. கே. ஜெகன் கேட்டுள்ளார்.

செல்லத்துரை பிரதீபன் (தவசிகுளம்), குணரத்தினம் முருகானந்தா (உசன், மிருசுவில்), யோகரத்தினம் சிவகரன் (மிருசுவில்) ஆகியோரே தமது அலுவலகத்துக்கு வந்து தங்கியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-6)

## நாய்களுக்கு லைசென்ஸ்

வலி. கிழக்கு, செப். 30

வலி.கிழக்குப் பிரதேசசபை வளர்ப்பு நாய்களுக்கான லைசென்ஸ்வழங்கிவருகிறது.

நாய்களை வளர்ப்போர் பிரதேச சபையில் பணம் செலுத்தி அதற்கான பட்டியைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச சபையின் செயலாளர் செ. குகதாசன் தெரிவித்தார்,

இதேவேளை லைசென்ஸ் பெற்றுக் கட்டிவளர்க்கப்படாத நாய்கள் கட்டாக்காலி நாய்களாகக் கருதப்பட்டு பிடித்து அழிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-180)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
விஜய் – ரம்பா நடித்த
**மின்சாரக்கண்ணா**
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No. 070-212223
(69290)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
சரத்குமார் – வினித்தா
சுகன்யா – கவுண்டமணி நடித்த
**மகாபிரபு**
காட்சிகள்: 11-00, 2-30
(புதிய நேரம்)
(69365)

**ராஜா**
யாழ்ப்பாணம்
ரஜனி - குஷ்பு
மற்றும் பலர் நடித்த
**பாண்டியன்**
10-30, 2-30
(இ/9112)

## பஸ் மற்றும் ரயில்களில்
# குண்டுப் பரிசோதனையில் மோப்ப நாய்கள் ஈடுபாடு

கொழும்பு, செப். 30

கொழும்பு நகரில் பஸ்கள் மற்றும் ரயில்களில் குண்டுப் பரிசோதனைகளில் விசேட பயிற்சி பெற்ற மோப்ப நாய்களை ஈடுபடுத்தும் திட்டம் ஒன்றை பொலீஸார் நடைமுறைக்கு கொண்டுவந்துள்ளனர்.

பஸ்கள் மற்றும் ரயில்களில் அடிக்கடி குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறுவதை அடுத்து இந்த நடைமுறை அமுல் செய்யப்படுவதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த நடைமுறையின் படி கொழும்பில் இருந்து தூர இடங்களுக்குச் செல்லும் பஸ்கள் மற்றும் ரயில்கள் இந்த சோதனைக்கு உட்படுத்தப்படும் என கொழும்பு பிரதிப் பொலீஸ்மா அதிபர் தெரிவித்தார். (இ-3-க)

## கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், செப். 30

முதியோர் வாரத்தை ஒட்டி கொக்குவில் லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ள முதியோருக்கான கண்பரிசோதனை முகாமும் இலவச கண்ணாடி வழங்கலும் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8 30 மணிக்கு கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள நிறைவாழ்வகத்தில் இடம் பெறவுள்ளன.

இந்த முகாமில் கண்பரிசோதனைகளை எரிக்கணேஷ் நிறுவனம் மேற்கொள்ளும். (இ-3-க)

# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம்பிள்ளை சேனாதிராசா

சங்கரத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளைப்பாறிய தொலைத்தொடர்புகள் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் தா. சேனாதிராசா 28–9–99 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும், பத்மாவதி (ஜேர்மனி), கலாவதி (ஜேர்மனி), சத்தியவதி (இங்கிலாந்து), சாந்தினி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தகுமார் (ஜேர்மனி), நடராசா (ஜேர்மனி), லோகேஸ்வரன் (இங்கிலாந்து), விஜயகுமார் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரஞ்சினி, காண்டீபன், பிரகாஷ் அருணன், அபிராமி, டாறணி, மெலனி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம் (மலேசியா), சிவபாக்கியம் (மலேசியா) மற்றும் தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கருணானந்தன் (மலேசியா), மகேஸ்வரி (மலேசியா), னகலிங்கம், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் (மலேசியா), சண்முகநாதன் (பொறியியலாளர்), அருமைநாதன் (மலேசியா) மற்றும்பரமநாதன் (மலேசியா), பஞ்சலிங்கம் (Chief M L T., மகரகம), மகாலிங்கம் (ஆஸ்திரேலியா), நாகலிங்கம், நவரெட்ணம் (இங்கிலாந்து), செல்வலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் நா. ஜெயரஞ்சிதம் J P. அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சேனாதிராசா
சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (69492)

## அரியகுட்டி சண்முகசுந்தரம் (வேலாயுதம்)

தொல்புரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது வன்னேரிக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட அரியகுட்டி சண்முகசுந்தரம் அவர்கள் 27–9–99 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி–சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை – இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் விமலவேணி (சுகாதாரத் திணைக்களம், வவுனியா), லிகிதமாலா, சங்கரேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ, சுப்பிரமணியம் (சகோதரன்)
(அதிபர், காட்டுப்புலம் அ த.க.பாடசாலை, சுழிபுரம்)
''துவாரகை''
மூளாய், சுழிபுரம். (69486)

## திருமதி முருகேசு பூரணம் (சின்னமணி)

அச்சுவேலி பத்தமேனி வைரவர் கோயிலடியைச் சேர்ந்த திருமதி முருகேசு பூரணம் (சின்னமணி) அவர்கள் (29—09—99) நேற்று புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-09-99) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பத்தமேனி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ஞா. கோபு (மருமகன்)
பத்தமேனி வைரவர்கோயிலடி, அச்சுவேலி. (69480)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள்கள் இன்றி இயங்கும் மிகச் சிறிய ஹெலி!

## சீனா உருவாக்கியது

பெய்ஜிங், செப். 30

ஆள் இல்லாது இயங்கும் மிகச் சிறிய தன்னியக்க ஹெலி ஒன்றை சீன விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

18 மில்லி மீற்றர் நீளமும் 5 மில்லி மீற்றர் அகலமும் கொண்ட இந்தக் ஹெலியின் எடை 100 மில்லிக்கிராம் எனத் தெரிவிக்கப்யட்டது.

இந்தக் ஹெலியை இராணுவ நோக்கங்களுக்கும், பொது நோக்கங்களுக்கும் பயன்படுத்த முடியும் என இதனை உருவாக்கிய விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இந்த மிகச்சிறிய ஹெலி தரை இறங்குவதற்கு இரு நிலக் கடலைகளைச் சேர்த்து வைக்கும் அளவு இடம் மட்டுமே போதுமானது என்று சீனாவில் உள்ள செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது.

ஆள் இல்லாது இயங்கும் தன்னியக்க விமானங்கள் தற்போது பாவனையில் உள்ளன. பல நாடுகள் தமது இராணுவ உளவு நடவடிக்கைகளுக்காக இந்த விமானங்களைப் பயன்படுத்தி வருகின்றன.

தற்பொழுது புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஆளில்லாத சிறிய ஹெலியும் இராணுவ உளவு நடவடிக்கைகளுக்கு அதிகம் உதவும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-6)

# அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் கிளின்ரன் இந்தியா விஜயம்

## பாகிஸ்தான் பங்களாதேஷுக்கும் செல்வார்

நியூயோர்க், செப். 30

அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் இந்தியாவுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

இந்தியாவில் புதிய அரசு பதவியேற்ற பின்னர் அமெரிக்க ஜனாதிபதியின் விஜயம் இடம்பெறும் என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மெடலின் ஆல்பிறைற் தெரிவித்தார்.

இந்தியாவுக்கான அமெரிக்க ஜனாதிபதியின் விஜயம் கடந்த ஆண்டே திட்டமிடப்பட்டு இருந்தது. எனினும் இந்தியாமேற்கொண்ட அணு வெடிப்புப் பரிசோதனைகளை அடுத்து இந்த விஜயம் கைவிடப்பட்டது.

கிளின்ரனின் விஜயத்தின் போது காஷ்மீர் விவகாரத்தில் தீர்வு ஒன்றை எட்டுவது குறித்து அவர் இந்தியாவுடனும்பாகிஸ்தானுடனும்தனிப்பட்ட முறையில் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய விஜயத்தின் பின்னர் பில் கிளின்ரன் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது. [இ-6]

# புருண்டி தேவாலயத்துக்குள் சூடு! 30 க்கும் மேற்பட்டோர் பலி!

முஜும்புரா, செப். 30

புருண்டியில் உள்ள கத்தோலிக்கத் தேவாலயம் ஒன்றின் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் அங்கு பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த 30 பேர் வரை உயிரிழந்தனர்.

தலைநகர் முஜும்புராவுக்கு 9' கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தேவாலயத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இராணுவச் சீருடையில் வந்த சிலர் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து 30 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். ஏனையவர்கள் தப்பி ஓடி அருகில் இருந்த அகதி முகாம் ஒன்றுக்குள் தஞ்சமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேவலாயத்துக்குள் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு பொறுப்பானவர்கள் யார் என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் —

இந்தக் கொலைகள் இடம்பெற்றதற்கான காரணம் எதுவென அறியப்படவில்லை என்றும் —

புருண்டிப் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-6)

# சுக்கான் இல்லாத கப்பலின் நிலையில் காங்கிரஸ் கட்சி

## வாஜ்பாய் சொல்கிறார்

புதுடில்லி, செப். 30

காங்கிரஸ் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் சுக்கான் இல்லாத கப்பல் போன்று குழப்பமான நிலையில் உள்ளன.

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் கல்கத்தாவில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலின் பின்னர் என்ன செய்வது என்பதில் காங்கிரஸ் கட்சி தெளிவாக இல்லை.

காங்கிரஸ் தனித்து ஆட்சி அமைக்கும் என்றும் —

காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைக்கும் என்றும் —

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கூறி வருகின்றார். இது மக்களிடம் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றது.

அதேசமயம் —

காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேரள மாநிலத்தில் காங்கிரஸை எதிர்த்துப் போட்டியிடுகின்றது என்றும் வாஜ்பாய் மேலும் தெரிவித்தார். (ஐ-6)

### தீவிரப்படுத்தக் கோரிக்கை

சோனியா காந்தி தேர்தலில் போட்டியிடும் அமேதி தொகுதியில் பாதுகாப்பை மேலும் தீவிரப்படுத்துமாறு காங்கிரஸ் கட்சி கோரியுள்ளது.

வாக்குப் பதிவின் போது தேர்தல் வன்முறைகள் பெருமளவில் இடம்பெறலாம் என்பதால் பாதுகாப்பைத் தீவிரப்படுத்துமாறு காங்கிரஸ் தேர்தல் ஆணையாளரிடம் கேட்டுள்ளது.

இதுதொடர்பாக காங்கிரஸ் தூதுக் குழு ஒன்று தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து நிலைமையை விளக்கி உள்ளது. (ஐ-6)

# எகிப்தின் அதிபராக முபாரக் நான்காவது தடவை தெரிவு

கெய்ரோ, செப். 30

எகிப்திய அதிபர்ஹொஸ்னி முபாரக் மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அதிபர் பதவியில் அவர் தொடர்வதா அல்லது இல்லையா? என்பது குறித்து நடைபெற்ற அபிப்பிராய வாக்கெடுப்பில் முபாரக் அதிபர் பதவியில் தொடர வேண்டும் என எகிப்திய மக்கள் வாக்களித்துள்ளனர்.

97.93 சதவீதமானோர் முபாரக்குக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். (இ-6-க)

# படைபலத்தில் பாகிஸ்தான் இந்தியாவை மிஞ்ச முடியாது

## இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர்கூறுகிறார்

புதுடில்லி, செப். 30

இந்தியாவின் இராணுவ பலத்துக்கு நிகராக ஈடுகொடுக்க பாகிஸ்தானால் ஒருபோதும் முடியாது என இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிர்தேஷ் மிஷ்ரா தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாகிஸ்தான் தனது நீண்டதூர ஏவுகணையான 'கோரி' ஏவுகணையை விரைவில் பரிசோதனை செய்ய உள்ளது குறித்து இந்தியா கவலைப்படப் போவதில்லை.

இராணுவ பலத்தில் ஒருபோதும் பாகிஸ்தான் இந்தியாவுக்கு ஈடுகொடுக்க முடியாது.

இந்திய ஏவுகணைகளின் திறன்களை மிஞ்சுவதற்கு பாகிஸ்தான் முயன்றால் அது அந்த நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்து விடும்.

பாகிஸ்தானின் இந்த முயற்சி அதன் பேராசையையே எடுத்துக் காட்டுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-6)

# நெல்சன் மண்டேலாவுக்கு கர்நாடக அரசு விருது

புதுடில்லி, செப். 30

இந்தியாவின் கர்நாடக மாநில அரசாங்கம் புதிதாகத் தோற்றுவித்த 'சர்வதேச பஸவ பிரஸ்கரா' விருது முதல் தடவையாக தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப்பட உள்ளது.

கர்நாடக பண்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி நீலா தேஷிட் பிரசாத் பெங்களூரில் இதனை அறிவித்தார்.

இனவேற்றுமையை எதிர்த்துப்போராடியதற்காக இந்த விருது நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

உலக மக்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்துவதற்காக 12 ஆம் நூற்றாண்டில் பாடுபட்ட சீர்திருத்த வாதியான ஜோதிச் பகவேஸ் வனரயா நினைவாக இந்த விருது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

10 லட்சம் ரூபா பெறுமதியான இந்த விருது முதற் தடவையாக இந்த ஆண்டே வழங்கப்படுகின்றது. [ஐ - 6]

### பஸ் விபத்தில் உயிரிழப்பு

ஜோஹனஸ் பேர்க், செப். 30

தென் ஆபிரிக்காவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்து ஒன்றில் 30 பிரிட்டிஷ் சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர்.

ஜோஹனஸ்பேர்க்குக்கு கிழக்கே 250 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஓர் இடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (இ-6)

# எதிரணிப் படை வசம் இருந்த முக்கிய நகரை தலிபான் படையினர் கைப்பற்றினர்

காபூல், செப். 30

எதிரணிப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை நோக்கி முன்னேறி வரும் தலிபான் படையினர் எதிரணிப் படைகளின் வசம் இருந்த முக்கிய நதித்துறைமுக நகரைக் கைப்பற்றியுள்ளனர்.

கசகிஸ்தான் எல்லையோரமாக அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஷேர்கான் பந்தர் என்ற நதித்துறைமுகத்தையே தலிபான் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நகரைக் கைப்பற்றுவதற்கு முன்னர் எதிரணியினரின்கட்டுப்பாட்டில் இருந்த இரு முக்கிய நகரங்களையும் தலிபான் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.

'டக்கார்' என்ற இடத்தில் எதிரணித் தலைவர் அகமத் ஷா மசூத்தின் படையினருக்கும் தலிபான் படையினருக்கும் இடையில் தொடர்ந்து தீவிர மோதல்கள் இடம்பெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து முன்னேறி வரும் தலிபான் படையினர் 'டக்கார்' நகரைத் தாக்கி அழித்து விடுவர் என்ற அச்சத்தில் மக்கள் நகரை விட்டுத் தப்பி ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

ஆப்கானிஸ்தானின் பெரும் பகுதியைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் தலிபான்கள் எதிரணிப்படைகள் வசம் இருந்த எஞ்சிய பகுதிகளையும் கைப்பற்றும் நோக்கில் இந்த புதிய படை நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர். [ஐ-6]

# பி. ஜே. பி. கூட்டணி 249 இடங்களைக் கைப்பற்றும்

புதுடில்லி, செப். 30

இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களுக்காக இதுவரை வாக்களிப்பு நடைபெற்ற 418 இடங்களில் 249 இடங்களை பாரதீய ஜனதாக்கட்சி தலைமையிலான கூட்டணி கைப்பற்றும் என்று கருத்துக் கணிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் தொலைக் காட்சி நிறுவனம் ஒன்று 'இன்சைட்' என்ற பெயரில் இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தியது.

காங்கிரஸ் கட்சி 134 இடங்களையும், ஏனைய கட்சிகள் 35 இடங்களையும் கைப்பற்றும் என்றும் கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-6]

# திருப்தியான அளவில் உணவளிக்க பெண்கள்மீதானகட்டுப்பாட்டை நீக்குமாறு ஐ. நா. கோரிக்கை

நியூயோர்க், செப். 30

பெண்களுக்குக் கல்வி அளிப்பதன் மூலமும் பெண்கள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் மூலமும் எதிர்கால சமுதாயத்துக்கு திருப்தியான அளவில் உணவளிக்க முடியும் என ஐ. நா. சபை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் உலக சனத்தொகை அறுநூறு கோடியைத் தாண்டிவிடும். கடந்த 12 வருடங்களில் நூறு கோடி மக்கள் அதிகரித்துள்ளனர். எதிர்வரும் இரண்டாயிரத்து ஐம்பதாம் ஆண்டில் உலக சனத்தொகை 890 கோடியாக அதிகரிக்கும்.

இந்த 890 கோடி மக்களுக்கும் உணவளிக்க வேண்டுமாயின் இப்போது உள்ளதை விட இரண்டு மடங்கு கலோரி உணவு தேவைப்படும். எனவே சனத்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு பெண்களுக்கு கல்வி அளிப்பது அவசியம்.

★ திருமணத்தைத் தாமதப்படுத்துதல்—

★ முதலாவது குழந்தை பிறப்பதை தாமதப்படுத்தல்—

★ குழந்தைகளுக்கிடையே வயது வித்தியாசத்தை அதிகரித்தல் — ஆகிய விடயங்கள் தொடர்பாக பெண்களுக்கு கல்வி வழங்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புறொஜெக்டர் Sanyo -220P (300'') விற்பனைக்குண்டு- தொடர்பு: சிவகுமார் (சிறி) பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம். T. P. No. 021 – 2917 (69465)

---

சாவகச்சேரி கண்டி வீதி, இலங்கை வங்கிக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட நான்கு கடைகளும் மேல் மாடி வீடும் விற்பனைக்கு உண்டு. தனித்தனியே பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: ச. நாகராசா தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (சி/ 9105)

### குத்தகைக்கு

சரஸ்வதி நூல் நிலையத்துக்கு அருகில் நெல்குற்றும் அரிசி ஆலை மிளகாய், மா அரைக்கும் தளபாடங்களுடன் மாத குத்தகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: கா. லோகேஸ்வரன், இல. 464, கண்டி வீதி, அரியாலை. (சி/9120)

### தவறிவிட்டது

யோகரஜனி யோககுருநாதன் என்பவரது விசேட அ. அட்டை (0902011489) 25-9-99 இல் தட்டாதெரு சந்திக்கும் நாவலர் பாடசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் லிங்கம் சில்க் ஹவுஸ் யாழ்ப்பாணம் அல்லது 91, சம்பியன் லேன், கொக்குவில் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (69463)

### SPOKEN ENGLISH

இலக்கணம் இன்றிச் சுலபமான முறையில், விரைவாகக் கதை பயில (பாடசாலை மாணவர்களுக்குஇலக்கணம், வினாவிடை பயிற்சி தனிப் பிரிவாக) ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (69419)

## வாராந்த நிகழ்வு

கொழும்புத்துறை, செப். 30

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய சுறறாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு ''ஆகமமும்ஆலய வழிபாடும்' என்ற தலைப்பில் ஓய்வு பெற்ற அதிபர் பண்டிதர் சி. வேலாயுதம் உரை நிகழ்த்துவார்.

பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் இந் நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்விற்கான அறிமுக உரையைஉடுப்பிட்டி க. சிவக்கொழுந்து நிகழ்த்துவார்.

நண்பகல் 12.30 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (ஐ-30-173)

---

## யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி
# பாராட்டுகின்றோம்

28 - 09 - 1999 அன்று நடைபெற்ற தென்மராட்சி வலய மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் 18, 16 வயதுப் பிரிவுகளில் எமது கல்லூரி அணிகள் இரண்டுமே முதலாம் இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தமையயிட்டு மனம் நிறைந்த எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்,
பழைய மாணவர் சங்சம்,
பாடசாலை அபிவிருத்திச் சபை.

[சி/9123]

---

# வாழ்த்துகின்றோம்

யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகப் பதவி பெற்ற

## திரு. துரைதவராஜா

அவர்களை மனமார வாழ்த்துகின்றோம்.

மா. செ. விஸ்வலிங்கம்
குடும்பத்தினர்.

கோண்டாவில். [69477]

---

# வாழ்த்துகின்றேன்

நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமனம் பெற்ற மோகன்ஸ் ரெலிகொமினிக்கேசன் ரைப்பிங் சென்ரர் உரிமையாளரும் சமய, சமூகத் தொண்டனுமாகிய

## உயர்திரு. எஸ். கணேசன்

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

ஆ. வன்னியசிங்கம்

மத்தொனி, கரவெட்டி. (69448)

---

# பாராட்டுகிறேன்

நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றவரும், ''மோகன்ஸ்'' ரெலிகொமினிகேசன், ரைப்பிங் சென்ரர் உரிமையாளருமாகிய

## உயர்திரு. எஸ். கணேசன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

கே. எஸ். முத்துக்குமாரசாமி
(சட்டத்தரணி)
(69447) பருத்தித்துறை.

---

# பெயர் மாற்றம்

ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறுவதாக 15—09—99 ஆம் திகதிய உதயனில் வெளியான மென்பந்து கிரிக்கெட்போட்டி விளம்பரம் தொடர்பாக:-

மேற்படி போட்டி தற்போது பெயர்மாற்றம் செய்யப்பட்டு 'நல்லூர் மத்திய விளையாட்டுக் கழகம்' என்ற பெயரிலேயே நடத்தப்படுகிறது.

ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகத்தின் பெயரைத் தவறுதலாகப் பிரசுரித்தமைக்காக வருந்துகிறோம்.

★ போட்டிகள் யாவும் கல்வியங்காடு விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் [சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் அருகில்].

T. சதீஸ்குமார்
தலைவர்.

மத்திய விளையாட்டுக் கழகம்
நல்லூர். [69464]

---

# 1St in Com., G. A. Q. வெளிவாரி
## யாழ்., பேராதனைப் பல்கலைக்கழகம்

★ A/L இல் 3 பாடங்கள் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம்) சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இப் பாடநெறிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

★ இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தில் செய்து கொள்ளலாம்.

★ விண்ணப்பப் படிவத்தினையும் விவரங்களையும் நேரில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளவும்.

இதற்கான விரிவுரைகள் ஆரம்பம்: **02 - 10 - 99** (காலை 8 மணி)

விவரங்களுக்கு:
S. அருள்நங்கை.

**புதிய [illegible] கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ். ([illegible])

---

# கமத்தொழில்நிலையத்தின் கிளை மல்லாகத்தில்

காங்கேசன் துறை கமத்தொழில் சேவை நிலையத்தின் கிளை ஒன்று மல்லாகம் நீதிமன்ற வீதியில் உள்ள தனியார் வீடு ஒன்றில் திறக்கப்பட்டுள்ளது.

வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கான கமத்தொழில் சேவை நிலையம் கடந்த கால இடப்பெயர்வைத் தொடர்ந்து பல இடங்களில் இயங்கி வந்தது.

தற்போது இது சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கிவருகின்றது.

வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் மக்கள் மீளக் குடியேறத் தொடங்கியதைத் தொடர்ந்து பல அமைப்புகள் இந்த நிலையத்தை சொந்த இடத்துக்கு இடம்மாற்றுமாறு கோரியதைத் தொடர்ந்து இங்கு நிறுவப்பட்டுள்ளது. (ஐ.86)

---

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி வன்னியசிங்கம்
(குரும்பசிட்டி)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நாச்சிமார் கோயிலடியில் வசித்தவரும் தற்போது தெகிவளையில் வசித்தவருமாகிய சின்னத்தம்பி வன்னியசிங்கம் [இளைப்பாறிய பிரதம எழுதுநர், தபாற் திணைக்களம்], 24 - 09 - 99 அன்று காலமானார்.

அன்னார் இலட்சுமியின் அன்புக் கணவரும் துரைசிங்கம் [ஆஸ்திரேலியா], தனபாலசிங்கம் [ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி[ ஆகியோரின் அன்புத் தந்தையும். வனிதாவின் அன்பு மாமனாரும் கனகசுதன் ]ஆஸ்திரேலியா], கனகம்மா, காலஞ்சென்ற நாகலிங்கம், தங்கம்மா, தற்பராசக்தி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26 - 09 - 99 அன்று கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
வ. தனபாலசிங்கம்
]மகன்]

இல. 65, வைத்தியா றோட்,
தெகிவளை.
[69467]

---

## அப்பாக்குட்டி திருநாவுக்கரசு

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி கோயில் குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி திருநாவுக்கரசு 28-09-99 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் கமலநாயகியின் அன்புக் கணவரும், இராசலிங்கம், ஞானசம்பந்தர் — ஞானரஞ்சிதம், சிவசுப்பிரமணியம் — சிவபாக்கியம், சிவகுருநாதன், சிவசுப்பிரமணியம் — சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும், பிரபாகரன் [கனடா], ராசு — பிரகலாதினி [லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மனோவதி, இரத்தினராசா — ஜெயமணி [சுழிபுரம்] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 30-09-99 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கமலநாயகி
[மனைவி]

கோயில் குடியிருப்பு,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
[69459]

---

## வேலாயுதர் கந்தையா
(இளைப்பாறிய கணக்காய்வு அத்தியட்சகர்)

கைதடியைப் பிறப்பிடமாகவும் கேணிக்கரை அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் கந்தையா 29—09—99 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் கைதடி காலஞ்சென்றவர்களான வேலாயுதர் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், இளைப்பாறிய ஆசிரியை விக்கினேஸ்வரியின் (யா/ மல்லாகம் ம. வி) அன்புக் கணவரும், இளைப்பாறிய அதிபர் (அருணோதயக் கல்லூரி), விஸ்வநாதன் தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்லத்துரை (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவராஜசிங்கம் (சாமுவேல் அன்சன்ஸ்), மங்கையர்க்கரசி சிவனேசன் (இளைப்பாறிய ஆசிரியை), சிவானந்தராசா (படவரைஞர்), சிவஞானசேகரம் (ஆசிரியர், பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்), சிவரூபன் (ஹற்றன் நஷனல் வங்கி, கொழும்பு), ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 30—09—99 இன்று நண்பகல் 12 மணியளவில் அளவெட்டி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. விஸ்வநாதன் [மாமனார்[,
திருமதி க, விக்னேஸ்வரி [மனைவி[

பிள்ளையார் வீதி,
கேணிக்கரை,
அளவெட்டி.
(69469)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா போன்ற மேற்கு நாடுகள்

# ஐ.நா தலையீட்டுக்கு உதவவேண்டும்

## அந்நாட்டுதூதரிடம் இங்கு எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், செப். 30

இலங்கை இனப்பிரச்சினையில் ஐ. நா. சபை தலையிடுவதற்கான அழுத்தத்தைக் கனடா போன்ற மேற்கு நாடுகள் ஏற்படுத்தவேண்டும்.

யாழ்ப்பாணம் வந்துள்ள கனடா நாட்டுத் தூதுவரிடம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைக்கான கனடா நாட்டுத் தூதுவர் திருமதி ருத்ஆச்சி பால்ட் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் இணையத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைவரத்தைப் புள்ளி விவரங்களுடன் அவர்களுக்கு இணையப் பிரதிநிதிகள் எடுத்துக்கூறினார்கள்.

போரினால் சீரழிந்து வரும் இந்த நாட்டில் உடனடியாகச் சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கான முன் முயற்சிகளில் கனடா போன்ற நாடுகள் 3 ஆம் தரப்பாக நின்று உதவி செய்ய வேண்டும்.

இலங்கையில் கடந்த பல வருடங்களாக நடைபெற்று வரும் போரை நிறுத்துவதற்கு ஐ. நா. சபையின் பங்களிப்புத் தேவை.

ஐ. நா. வின் பங்களிப்பு இல்லாமல் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியாது. இங்கே தொடரும் பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினை என்று எவரும் ஒதுக்கிவிட முடியாது.

இப்படி அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஐ-4)

### பரந்தன் பகுதியில்

# நச்சுவாயு கொண்டு புலிகள் தாக்கியதாகக் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 30

ஆனையிறவுக்குத் தெற்கே கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலின்போது நச்சு ஆயுதத்தைப் புலிகள் பயன்படுத்தினரா என்ற சந்தேகம் படைத்தரப்பில் ஏற்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

அன்று அப்பகுதியில் புலிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து சில படையினரின் கண்கள் சிறிது நேரம்பார்வை இழந்திருந்ததாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஜெனீவா உடன்படிக்கையின்படி யுத்தத்தில் நச்சு வாயுக்கள், ஆயுதங்களில் பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் புலிகள் இதற்கு முன்னரும் குறைந்த நச்சுத் தன்மை கொண்ட வாயுவைப் பயன்படுத்தி உள்ளனர் என்று அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

பரந்தன் பகுதியில் ஷெல்கள் வெடித்த இடத்தில் இருந்து மீட்கப்பட்ட சில பாகங்கள் மேலதிக பரிசோதனைகளுக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

### பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு

# நிதி சேகரிப்பதை தடை செய்ய நாடுகளின் ஆதரவு தேவை

## அமைச்சர் அனுருத்த தெரிவிப்பு

கொழும்பு, செப். 30

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி சேகரிப்பதைத் தடை செய்யும் முயற்சிகளுக்கு சகல நாட்டு அரசாங்கங்களும் ஒன்றிணைந்து ஆதரவு வழங்க வேண்டும் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

''சர்வதேச பயங்கரவாதம்'' என்ற தலைப்பில் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தற்போது நடைபெறும் ஐ நா. சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் பயங்கரவாதிகளுக்கு நிதி வழங்குவதை நிறுத்துவதற்கான சர்வதேசப் பிரகடனம் அங்கீகரிக்கப்படுவது மிக முக்கியத்துவம் வாய்ந்தது எனவும்—

விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் வன்செயல்கள் காரணமாக இலங்கை பொருளாதார, சமூக ரீதியாக பெரும் அழிவுக்கு உட்பட்டுள்ளதாகவும் —

அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

## அடிக்கல் நடும் வைபவம்

யாழ்ப்பாணம், செப். 30

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி விளையாட்டு மைதானத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கலந்து கொள்வார்.

3.5 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த மைதானத்தை கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (க)

## பரிசளிப்பு விழா

வலிகாமம் தெற்கு, செப். 30

ஏழாலை மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் சு. தம்பித்துரை தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு— கிழக்கு மாகாண காணி ஆணையாளரும் பிரதி செயலாளருமான சொ. அமிர்தலிங்கமும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கமலநாதனும் கலந்து கொள்வர்.

கலாபூஷணம் ஏ.ரி. பொன்னுத்துரை வாழ்த்துரை வழங்குவார். (க-152)

# முதியோர் வார நிகழ்ச்சிகள்

கைதடி. செப். 30

கைதடி முதியோர் இல்லத்தில் சர்வதேச முதியோர் வாரத்தை ஒட்டி நாளை முதலாம் திகதி தொடக்கம் ஏழு நாள்கள் முதியோர் வாரம் கொண்டாடப்படவுள்ளது.

முதியோர் இல்லப் பொறுப்பதிகாரி திருமதி இ. துரைரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளஇந் நிகழ்வுகளுக்கு தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தொடக்குநராகக் கலந்து ஆசியுரை வழங்குவார். இறுதி நிகழ்வாக சின்னமணி குழுவினரின் வில்லிசை இடம் பெறும்.

எதிர்வரும் சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழகம் முதியவர்களைக் கௌரவிக்கும் பல நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளது. அடுத்த நாள் சன சமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளவுள்ளன. அன்று மாலை கலைக்குரிசில் ச. சிவஞானம் குழுவினரின் 'காத்தவராயன்' சிந்து நடைக்கூத்து இடம் பெறும்.

தென்மராட்சி லயன்ஸ் கழகமும் சாவகச்சேரி லியோ கழகமும், இணைந்து விளையாட்டுப்போட்டிகளையும் நடத்தவுள்ளன. அத்துடன் முதியவர்களின் கலை நிகழ்வுகள் மதிப்பிடப் பெற்றுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன இறுதி நாள் நிகழ்வில் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரையும், அருளுரையும் வழங்குவார். இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் க. சண்முகதாதனும் யாழ், பல்கலைக்கழகப் பதிவாளர் கலாநிதி க. குணராசாவும் கலந்து கொள்வர்

கட்டுரை, கவிதைப் போட்டிகளில் முதலிடம் பெறுபவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். அன்று பிற்பகல் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய மாணவிகளின் கலை நிகழ்வுகளும் அருணா இசைக்குழுவினரின் இன்னிசைக் கானமும் இடம் பெறும். (ஐ-74-30)

★ ★ ★

வேலணை, செப். 30

முதியோர் தினத்தை ஒட்டி தீவக கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பாடசாலை மட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகள் நாளை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் நடைபெற உள்ளன. (ஐ-167)

★ ★ ★

திருநெல்வேலி, செப். 30

யாழ். மூத்தோர் தோழமைக் கழகம் நடத்தும் சர்வதேச முதியோர் தினவிழா நாளை மறுதினம் 2ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கழகத் தலைவர் சு. தம்பிஐயா தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி சு. நச்சினார்க்கினியன், யாழ் மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன், யாழ் இந்துக் கல்லூரி அதிபர் ஏ சிறிகுமாரன் யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன், யாழ். பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் சீ வி. கே. சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

முதியோரைக் கௌரவித்தல், பரிசில் வழங்கல், கலை நிகழ்ச்சிகள் ஆகியனவும் நடைபெறவுள்ளன. (ஐ-135)

# கொதித்து ஆறிய நீரைப் பருகுமாறு ஆலோசனை

மழைகாலம் ஆரம்பமாகி உள்ளதால் தொற்றுநோய்கள் பரவ வாய்ப்புள்ளதாகவும் எனவே பொதுமக்கள் சுகாதாரம் பேணும் நடைமுறைகளைக் கைக்கொள்வதுடன் கொதித்து ஆறிய நீரைப் பருகுமாறும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் செ. இந்திரராஜா தெரிவித்துள்ளார்.

நீரினால் பரவக்கூடிய வாந்திபேதி, மலேரியா மற்றும் நோய்களின் பாதிப்புகளில் இருந்து பாதுகாப்பதற்கு கொதித்து ஆறிய நீரைப் பருகுவதும், நுளம்புகள் பெருக வாய்ப்பான சூழ் நிலைகளைத் தடுப்பதும் அவசியமாகும் என்றும் —

குறிப்பாக சிறு பிள்ளைகளைக் கொண்ட வீடுகளில் நீரைக் கொதிக்க வைத்துப் பருகுவதைக் கட்டாயமாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் —

அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பல இடங்களிலும் நீர் தேங்கி நிற்கக் கூடிய ஏது நிலைகள் இருப்பதால் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இப்போதிருந்தே நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் மலேரியாவைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

வீடுகளில் நீர் தேங்கி நிற்கக்கூடிய குழிகளை மூடுதல். சிரட்டைகள், தகரங்கள். ரயர்கள் போன்றவற்றை அப்புறப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ -180)

# இன்றைய நலிவு நிலையைப் போக்க சமய நெறிமுறை வாழ்க்கை தேவை

## சஞ்சிகை வெளியீட்டு விழாவில் உரை

நல்லூர், செப். 30

தமிழர்களுடைய கலாசாரம் மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் சமயத்தினூடாகவே வளர்ச்சிகண்டுள்ளன. ஆகையால் இன்றைய நலிவு நிலையை மேம்படுத்துவதற்கு சமய நெறிமுறைகளைக் கைக்கொண்டு வாழப் பழகுதல் அவசியம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகர சபை வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன்.

யாழ். மாநகர சபை சைவ சமய விவகாரக் குழுவினால் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற ''நல்லைக் குமரன்'' மலர் வெளியீட்டு விழாவுக்கு தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் நான்கு பெரிய மதங்கள் இலங்கை மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வந்தபோதும் சைவ சமயத்துக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை. எனவே சைவர்களாகிய நாமே எமது சமய பாரம் பரியத்தை பாதுகாக்க முன்வரவேண்டும் — என்றும் அவர் சொன்னார்.

சஞ்சிகையின் ஆசிரியர் க. விஜயசுந்தரம் தமது உரையில் — பாடசாலையில் சமயக் கல்வி போதிக்கப்பட்ட போதிலும் கூட திருநீறு அணிவதை ஒரு வெட்கக் கேடான செயலாக இன்றைய மாணவன் கருதுகிறான். எமது மதத்தில் உள்ள உயர்ந்த தத்துவக் கருத்துக்களை எவரும் புரிந்து கொள்ள முயலுவதில்லை. இந்த நிலை மாறவேண்டும்— என்றார்.

யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் உரையாற்றுகையில், சமாதானத்துக்குரிய நற் சிந்தனைகளை வெளிப்படுத்தக் கூடியதாக ஆன்மீகப் பலமும், அறிவுப் பலமும் ஒன்றிணைய வேண்டும் — எனத் தெரிவித்தார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், முன்னாள் பிரதி கல்விப் பணிப்பாளர் கோ. சி. வேலாயுதம், யாழ். மாநகர சைவசமய விவகாரக் குழுவின் செயலாளர் இரத்தினசிங்கம், பொருளாளர் து. சோமசுந்தரம் ஆகியோர் உட்படப் பல பிரமுகர்கள் உரையாற்றினர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (இ-ரி-103)

# 121 முன்பள்ளிகள் பதிவு செய்யப்பட்டன

வலிகாமம் தெற்கு, செப். 30

வலிகாமம் கல்விவலயத்தில் 121 முன்பள்ளி நிலையங்கள் வடக்கு — கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வடச்கு— கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளர் வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள 121 முன்பள்ளி நிலையங்களை பதிவு செய்து அவற்றுக்கான பதிவு இலக்கங்களையும் அனுப்பி வைத்துள்ளார்.

இதுவரை வலிகாமம் வலயத்தில் பதிவு செய்து கொள்ளாத முன்பள்ளி நிலையங்கள் அனைத்தையும் காலதாமதமின்றி வலிகாமம் வலய முறைசாராப் பிரிவில் பதிவினை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். போதனா வைத்தியசாலை
புனித வேளாங்கண்ணி அன்னையின்
திருநாள்

30-09-99 ஆரம்ப வழிபாடுகள் — மாலை 4.45 மணி
01-10-99 பணியாளர்களின் அர்ப்பணம்—மாலை 4.45மணி
02-10-99 குணமாக்கல் வழிபாடு — மாலை 4.45 மணி
03-10-99 திருநாள் திருப்பலி — காலை 7.15 மணிக்கு

பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம்
ஆண்டகை அவர்களால் நிறைவேற்றப்படும்.

குறிப்பு: ஞாயிறு, வெள்ளி தினங்களிலும், கடன்திரு நாள்களிலும், போயா தினங்களிலும் நண்பகல் 12 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படும்.

அன்னையின் ஆசீர்பெற அனைவரையும்
அன்போடு அழைக்கின்றோம்.

[69337] ஆன்மகுரு.

இணையற்ற விரிவுரையாளர்கள் ஒன்றிணையும்
DEGREE HALL
(பட்டப் படிப்பகம்)
2000 ஆண்டிற்கான
துரித விரிவுரைகள்
G. A. Q. I st in Com.
யாழ்., பேராதனை பல்கலைக்கழகங்கள்
(வெளிவாரி)
விரிவுரைகள் ஆரம்பம்:

02 - 10 - 1999 காலை 9 மணி

நிர்வாகி
பட்டப் படிப்பகம்
(BEACON அருகே)
374, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல:
021 - 2291
(69445)

# முதலாவது சிரார்த்ததின நினைவஞ்சலி



மலர்வு 10 - 05 - 1912
உதிர்வு 11 - 10 - 1998

## அமரர் ஆறுமுகம் சம்பந்தர்
(இளைப்பாறிய அதிபர்)

எங்குலத்தின் நல்முத்தே
எழில் மிகுந்த பெருவித்தே
ஓராண்டு கழிந்திடினும்
ஓயாது நின் நினைவு
பாசத்தின் விளைநிலமே
பண்பாட்டின் உறைவிடமே
சேவைக்கோர் உதாரணனே
சேவிப்பாய் சாயிபதம்
பொன்னுடலம் மாய்ந்திடினும்
உன் அன்பு நிலைத்திருக்கும்
ஆன்மாவின் சாந்திக்காய்
அனுதினமும் இறைஞ்சுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

61, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (69432)

# 9 ஆயிரத்து 122 ஹெக்டேயரில்
# இம்முறை குடாநாட்டில் நெற்செய்கை

யாழ்ப்பாணம், செப். 30

யாழ். மாவட்டத்தில் 9ஆயிரத்து 122 ஹெக்டேயரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத் திட்டத்தின்படி பண்டத்தரிப்பு, மறவன்புலோ, அராலிப் பகுதிகளில் தற்பொழுது 262 ஹெக்டேயரில் நெல் விதைக்கப்பட்டுள்ளது.

கடந்த பெரும்போகத்தில் 8 ஆயிரம் ஹெக்டேயரில் நெற்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இராணுவக் கட்டுப்பாட்டில்இருந்த சில நிலப் பகுதிகள் இவ்வருடத்தில் விடுவிக்கப்பட்டதைத்தொடர்தே 9ஆயிரத்து122ஹெக்டேயரில் நெற்செய்கையை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் ஆயிரத்து 476 புசல் விதைநெல் கமநல சேவைகள் நிலையத்தினால் எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும்—

மேலும் 100 புசல் விதை நெல் கப்பலில் கொண்டு வரப்படவுள்ளதாகவும், விதை நெல் தேவையான கமக்காரர்கள் கமநல சேவை திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும், திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ். சுந்தரேசன் தெரிவித்தார். (ஐ-5)

## வயோதிபர் வீடு திரும்பவில்லை

நெல்லியடி, செப். 30

வல்லிபுர கோயிலில் நடைபெற்ற பட்டுத் தீர்த்த உற்சவத்துக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் இதுவரை வீடு திரும்பவில்லையென பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருக்கின்றது.

சமூக சேவைத் திணைக்கள ஒய்வு பெற்ற உத்தியோகத்தரான புலோலி தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மகேந்திராசா (வயது82) என்பவரே கடந்த ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் காணாமற் போயிருப்பதாக அவரது பேரன்அமுதராசா, பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

(ஐ - 109)

## இளைஞனின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், செப். 30

கொக்குவில் பகுதியில் கடந்த திங்களன்று இடம்பெற்ற கிரனைட் வீச்சுச் சம்பவத்தின் போது உயிரிழந்ததாகத் தெரிவித்து இளைஞன் ஒருவரின் சடலம் யாழ், பொலீஸாரால் அன்றிரவு யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சடலத்தை நேற்று முன்தினம்நேரில் சென்று பார்வையிட்ட யாழ். மாவட்ட மேலதிகநீதிவான் எஸ். ஏ ஈ. ஏகநாதன் சடலத்தைப்பிரேத பரிசோதனை செய்யுமாறு வைத்தியசாலை சட்ட வைத்தியஅதிகாரியைப்பணித்தார்.

அடையாளம் காணும் பொருட்டு சடலத்தை மூன்று நாள்கள் வரை வைத்திய சாலைப் பிரேத அறையில் வைக்குமாறும்—

அடையாளம் காணப்படாத பட்சத்தில் சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்யுமாறும்—

நீதிவான் உத்தரவிட்டார்.

[உ-9-ரி-15-139]

## மழை நீரை சேமிக்கத் திட்டம்

நெடுந்தீவு, செப். 30

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு மழை நீரைச் சேமித்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென சுமார் பன்னிரண்டாயிரம் கலன் நீரைச் சேமிக்கக் கூடிய தொட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக ஆலய அறங்காவல் சபைத் தலைவர் ஆ. தியாகராசா தெரிவித்தார்.


(ஐ-111)

முன்பள்ளி
பாலர் ஆசிரியராக

ஒரே வழி! ஆறு மாதம்
தபால் வழியில் பயிற்சியை
நாடுங்கள்.

பாலர்
ஆசிரியர் சங்கம்,
கொக்குவில்.
(68727)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 08 — 02 — 1973
உதிர்வு 30 — 09 — 1996


## அமரர் சண்முகநாதன் சிவகுமார்
(வெள்ளை)

பத்துமாதம் சுமந்து பாரினிலே ஈன்றெடுத்து
தத்து நடை நீ நடந்த
தளிர் நடையை மறப்பேனா?
குயில் போல கூவு வதை மறப்பேனா?
இத்தரையில் எம்மைவிட்டு
எங்கு சென்றாய் சிவகுமாரா?

பிரிவால் துயருறும்:
அம்மா, அக்கா,
அத்தான். தங்கை,
மருமகன்.

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (69450)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் தம்பிஜயா கைலாயபிள்ளை
(கிளாக்கர்)

தோற்றம்: 21–11–1943
மறைவு: 01-09–1999

அப்பா......
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு — நீங்கள்
மீளாத்துயில் கொண்டு விட்டீர்கள்
ஆறாது எம்மனம் உங்கள் நினைவால்;

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

பாசமிகு
குடும்பத்தினர்

16, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம். [69457]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# அனலைதீவு மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு எப்போது?

அனலைதீவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகள் ஏராளம். எனினும் மிகவும் அத்தியாவசியப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தாலே போதும் என்கிறார்கள் மக்கள்.

வைத்தியசாலையில் போதிய வசதிகள் இருந்தும் வைத்திய அதிகாரி இல்லாது வைத்திய சேவைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கும் முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கணபதிப்பிள்ளை சிறியதலையிடிக்கும் ஊர்காவற்றுறைக்குச் செல்லவேண்டியிருப்பதாக விசனப்படுகிறார். போதிய ஆளணி இருந்தும் வைத்திய அதிகாரி இன்மையால் நாம் என்ன செய்வது எனப் புரியாத நிலையில் இருக்கிறோம் என்கிறார்கள் அங்குள்ள ஊழியர்கள். தமது நோய்க்கு மருந்து எடுத்துச் செல்லலாம் என நம்பிக்கையுடன் வரும் வயோதிபர்கள் ஏமாற்றத்துடன் திரும்பியதையும் அங்கு அவதானிக்க முடிந்தது. ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர்களுடன் ஊழியர்கள் மிகவும் பண்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சியைத் தந்தது.

ஆஸ்பத்திரியில் மின்ஒளி இல்லை. தண்ணீர்த் தட்டுப்பாடு உண்டு. ஜி.ரி. இசற் தொட்டி அமைத்துத் தந்துள்ளதே எனக் கேட்டபோது தொட்டி இருந்தென்ன தண்ணீர் வரவேண்டுமே என்று ஆதங்கப்பட்டார் ஓர் ஊழியர்.

ஊர்காவற்றுறையில் இருந்து தென்மேற்குத் திசையில் சுமார் ஏழு மைல்கள் தொலைவில் ஐந்து மைல் சுற்றளவு கொண்ட ஒரு தீவு அனலைதீவு. முன்னர் பாரிய குடிசெறிவைக் கொண்டிருந்த அங்கு இப்போது மூன்றில் ஒரு பகுதியினரே உள்ளனர். ஐந்நூற்றி எழுபத்துஐந்து குடும்பங்களில் மொத்தம் இரண்டாயிரத்து நூறு பேர்களே உள்ளதாகக் கூறும் கிராம அலுவலர் அன்பழகன் எட்டு ஒன்பது வருடங்களுக்கு முன் நெல் உற்பத்தி மிகக் கூடுதலாக இருந்ததாகவும் இன்று அது மோசமான வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் புகையிலை, மிளகாய், வெங்காயம் போன்ற உப பயிர்கள் தான் இன்றைய பிரதான உற்பத்தியாக இருப்பதாகவும் எனினும் சந்தைப்படுத்தும் வசதி இன்மையால் விவசாயிகள் அவற்றைக் கூடப் பாரிய அளவில் உற்பத்தி பண்ணத் தயங்குவதாகவும் கூறுகிறார். அனலைதீவின் அனேக வீடுகளில் புகையிலைப் போறணைகளைக் காணலாம்.

'கெயர்' தாபனம் விவசாயத் திணைக்களம் ஆகியவை விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு ஐம்பது பெண்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு விவசாய உள்ளீடுகளைவழங்கியுள்ளது. ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் செல்வநாயகம், விவசாயம் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு பொது நிறுவனங்களின் மூலம் உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதில் அக்கறையுடன் செயற் படுகிறார்.

குடிசைச் செறிவற்ற பிரதான வீதிக்கு மின் இணைப்பு செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் கூடுதலாக வதியும் குறுக்கு வீதிகளில் மின் சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்று ஒருவர் கவலை தெரிவித்தார்.

## உள்ளூர் வலம்

அங்கு குளங்கள் பெரிய அளவில் இல்லை. புகையிலை சுமார் 12 ஏக்கர் நிலத்திலும் மிளகாய் மற்றும் தோட்டப் பயிர்கள் சுமார் 3 ஏக்கர் நிலத்திலும் செய்கை பண்ணப்படுவதாக புண்ணியமூர்த்தி என்ற விவசாயி தெரிவித்தார்.

1996 இல் பரீட்சார்த்தமாக உருளைக்கிழங்கு பயிர் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் அதுகணிசமான பயனைத் தந்ததாகவும் சந்தைப்படுத்தும் வாய்ப்பு இருந்தால் விவசாயிகள் போதிய வருமானம் பெறக்கூடியதாக இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

பூசினிச்செடி ஒன்று ஒரு பூவில் மூன்று காய்களைக் காய்த்த அதிசயத்தை அனலைதீவில் காணமுடிந்தது.

### கல்வி நிலை

கல்வியைப் பொறுத்தவரை தீவுப்பகுதிகள் அனைத்தும் ஒரே மாதிரியாகவே உள்ளன. வேலணை துரைசுவாமி மகா வித்தியாலயத்திற்கு அடுத்தபடியாக மிகச் சிறந்த விஞ்ஞான கூடம் அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயத்திலேயே உள்ளது. ஆனால் விஞ்ஞான ஆசிரியர் இன்மையால் மாணவர்கள் இந்த விஞ்ஞான கூடத்தால் பயன்பெற முடியாமல் இருப்பதாக ஆதங்கப்படும் பெற்றோர்கள் ஏராளம்.

ஆசிரியர் பற்றாக்குறை என்று எதுவுமில்லை. எனினும் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களைக் கற்பிக்கத் தகுதியான ஆசிரியர்கள் இல்லை என்று அதிபர் கணேசமூர்த்தி கவலைப்படுகிறார். எனினும் ஆசிரியர்கள் மிகக் கூடுதலான அக்கறையுடன் தமக்கு உற்சாகமுடன் கற்பிப்பதாகச் சான்றிதழ் வழங்குகிறான் பத்தாம் ஆண்டு மாணவன் முகுந்தன்.

மகா வித்தியாலயக் கட்டடம் மிகவும் பழமை வாய்ந்தது. அதன் தளம் அனலைதீவு பிரதான வீதி போன்று குண்டும் குழியுமாகக் காணப்பட்டது. அது ஐம்பது ஆண்டுகள் பழமை வாய்ந்த கட்டடம் என்கிறார் ஒரு பழைய மாணவர்.

### பனைவளம்

பனைவளம் உண்டு எனினும் அது பயன் படுத்தப்படுவதில்லை. பனம் பொருள்கள் உற்பத்திக்குக் கூடுதல் செலவு ஏற்படுவதாகவும் வருமானம் அதிகமில்லை என்றும் சொல்லப்பட்டது.

கடற்றொழில் பிரதானஒன்றாக இருந்த போதும் கடல் வலயச் சட்டத்தால் 'தொழில் படுத்து விட்டதாக' கூறப்பட்டது. இப்போது நாங்கள் என்ன தொழிலா செய்கிறோம் முன்னர் எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்ந்தோம் என்று பெருமூச்சு விடும் சிந்தாத்துரை அப்படி ஒன்றும் பெரிய வயதுடையவரல்லர் சுமார் 40 வயது இருக்கும்.

எங்கள் படகுகள் ஆழ் கடலைக் கிழித்து அள்ளி வந்த செல்வங்களை நினைக்கிறோம்; பாருங்கள் அவை தூங்கிக் கிடக்கின்றன. அடையாள அட்டைகளைக் கொடுத்து விட்டு காலை 5 30 மணிக்குக் கடலுக்குச் சென்றால் இரண்டொரு கிலோ மீன் வரை கிடைக்கும். அதனுடன் திரும்பி விடுகிறோம். நூறு ரூபா வருமானம் எதற்குப் போதும் என்கிறார் மீன்வர் பேரம்பலம். குறைந்த பட்சம் அதிகாலை 2 மணிக்காவது தொழில் செய்ய அனுமதித்தால் பயனுண்டு கூடுதல்

**நெடுந்தீவு லக்ஷமன்**

மீன்கள் கிடைக்கும் பட்சத்தில் ஊர்காவற்றுறைக்குக் கொண்டு செல்லக் கூடியதாக இருக்கும் எனவும் சிந்தாத்துரை கூறினார்.

இங்குள்ள மக்களுக்கு அவர்கள் விரும்பும் நல்லரக மீன்களை வழங்கிய பின்னர் ஏனையவற்றை ஊர்காவற்றுறைக்குக் கொண்டு செல்கிறார்கள். பிடிக்கும் மீன்கள் அனைத்தும் சந்தைக்கு வருகிறது எனக் குத்தகையாளர் நவரத்தினம் சொன்னார் மீனவர்கள் முதலில் உள்ளூர் மக்களின்தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டுள்ளது. மகிழ்ச்சிக்குரியது.

### குடி தண்ணீர்ப்பிரச்சினை

குடி தண்ணீர் அங்கு ஒரு முக்கிய பிரச்சினை. அதிகாலையிலேயே சைக்கிளில் பெரிய பரல்களைக் கட்டிக் கொண்டு நல்ல தண்ணீர்க் கிணற்றை நாடிப் படையெடுப்பது ஆண்களின் தினசரிக் கடமைகளில் ஒன்று. வடலிக் குளம் என்ற இடத்தில்இருந்து குழாய் நீர்த் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஜீ. ரி. இஸட் இதனைச் செய்துள்ளது. எனினும் நீர் வழங்கு சபையோ ஏனைய பொறுப்பு வாய்ந்த சபைகளோ ஜூர்விநியோகத்தைக் கையேற்காததால் குழாய் நீர்த் தொட்டிகளில் இருந்து பொதுமக்கள் நீரைப் பெற்றுக் கொண்டதற்கான சில அடையாளத்தைக் கூடக் காண முடியவில்லை,

அனலை தீவில் உள்ள பெரும்பாலான மக்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர்: அநேக வீடுகள் வெறிச்சோடிக்கிடக்கின்றன. வெளிநாடு சென்றவர்கள் தமது சொத்துக்களைக் கோயில்களுக்கு வழங்கி விட்டனர் இங்கு இந்துக்களே அதிகம் இப்போது அந்தோனியார் கோயில் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துச் சேவைக்கென நான்கு படகுகள் இருந்த போதும் ஒரேயொரு படகு மட்டுமே சேவையில் உள்ளது ஊர்காவற்றுறையில் இருந்து காலை படகுச் சேவை இடம்பெறுவதில்லை. இதனால் அரசாங்க ஊழியர்கள் சிரமப்படுவதாகச் சொல்லப்பட்டது. போக்குவரத்துக்கட்டணமாக 15ரூபா அறவிடப்படுகிறது இதுகூடிய தொகைதான். எனினும் யாரும் இதுபற்றிப் பொருட்படுத்துவதில்லை. ★

## இனியும் இயலாது!

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கவும் போரை முடிவுக்குக் கொண்டு வரவும் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு — பங்களிப்பு — அவசியம் என்ற குரல் வெளியிலிருந்து ஒலிக்கத் தொடங்கியுள்ளது குறித்து ஏற்கனவே இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

இந்த முன்னுதாரணத்தை அல்லது முன்னோட்டத்தைத் தொடர்ந்து இலங்கைக்குவெளியிலிருந்து இது போன்ற குரல்கள் மேன் மேலும் ஒலிக்கும் என்றும் தெரிவித்திருந்தோம். அவ்வாறு ஓர் அழுத்தம் வராமல் தடுக்கும் நோக்குடன் இலங்கையின் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் நியூயோர்க்கில் நின்று உரத்த குரலில் பேசியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை உள்நாட்டு விவகாரம். அதில் ஐ. நா மட்டுமென்ன, வேறு எந்தத் தரப்பினரும் தலையிட வேண்டிய அவசியம் இல்லை. எந்தவொரு உள்நாட்டு விவகாரத்திலும் ஐக்கிய நாடுகள் அமைப்புத் தலையிடுவதை எம்மிற் பலரும் விரும்பவில்லை — என்று அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு உள்நாட்டு விவகாரம் என்று வரைவிலக்கணம் வகுத்துக் கொண்டு, இலங்கை அரசுகள் கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக தமிழர்களின் உரிமைகளை வழங்காது ஏமாற்றி வந்துள்ளன. மேலும் கடந்த பதினாறு வருடங்களுக்கு மேலாகப் போரை நடத்திச் சுமார் 65,000இக்கும் மேற்பட்ட தமிழர்களைக்கொன்றுள்ளன.

இரண்டு நாடுகளுக்கு இடையேயான போரைப் போன்ற நிலைக்கு யுத்தம் மிகவும் தீவிரமடைந்து வருகிறது. இத்தகைய சூழ்நிலையில் இனப்பிரச்சினைக்கு உள்விவகாரம் என்ற மூடி போட்டு மறைத்து வைக்க முயல்வது எந்த வகையிலும் பொருத்தமற்றதாகும்; வெற்றி அளிக்கக் கூடியதுமல்ல.

இனப்பிரச்சினையை உள்விவகாரமாகக் கொண்டால், அதனைத் தீர்ப்பதற்கு இத்தனை வருடங்களாக இலங்கை அரசாங்கங்கள் ஏன் இழுத்தடிக்கின்றன? இது அவர்களின் இயலாமையை எடுத்துக் காட்டுகின்றது.

இப்போதும் கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் நேர்மையான, விசுவாசமான முறையில் செயற்படவில்லை. ஆட்சிக்கு வந்து ஐந்து வருடங்களைக் கழித்து விட்டது. போரை நடத்தி தமிழ் மக்களை அழித்தும் அகதிகளாக்கியும் வருவதே கண்ட மிச்சம். அரசாங்கத்தின் நடத்தையில் அதற்கு ஆதரவளிக்கும் தமிழ்க்கட்சிகளுக்கே நம்பிக்கையில்லை. வெறுப்படைந்து பேசுகின்றன.

வெளியாரின் பங்களிப்பு இல்லாமல் சமாதான வழியிலான தீர்வு ஒன்றைக் காண்பது கஷ்டம் என்ற நிலையே இப்போது உருவாகியுள்ளது.

இனவிவகாரத்தை, தான் நினைத்தவாறு கையாண்டு காலத்தைக் கழிக்கவும் தான் விரும்பிய தீர்வு ஒன்றைத் திணிக்கவுமே இந்த நிலைப்பாடு என்பது தெளிவாகத் துலங்குகிறது.

கிழக்குத் திமோர் மக்களின் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டுத் தீர்வுக்கு உதவ முடியுமெனில், ஈழத் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் தகுதியும் கடமையும் அதற்கு எவ்வாறு இல்லாது போகலாம்? இலங்கை இனப்பிரச்சினையை மூடிமறைக்கவோ மூடி வைக்கவோ இனியும் இயலாது!

## நாளை

புரட்டாதி 14

வெள்ளிக்கிழமை

திதி: ஸப்தமி

பின் இரவு 2.23 வரை.

நட்சத்திரம்: மிருகசீரிடம்

நள்ளிரவு 12.11 வரை.

சுபநேரம்: 6.02—7.32

ராகுகாலம்: 10.32—12.02

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## உதயவாக்கு

தொண்டு செய்! ஏனென்றால், நீ அதற்காகத்தான் பிறந்திருக்கிறாய்.

இந்துமதம்

## கலந்துரையாடல்


விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் முகவர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 5 ஆம் திகதி முற்பகல் 11 மணிககு யாழ். மாவட்ட கமநல சேவை நிலையத்தில் நடைபெறஉள்ளது.

தமது விவசாய விளைபொருள்கள், மரக்கறிவகைகள் என்பன உரிய விலையில் கொள்வனவு செய்யப்படுவதில்லை என்று விவசாயிகள் அதிருப்தி தெரிவித்ததை அடுத்து இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவில் பயிற்சி நெறிகளில் பங்கு பற்றியவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் 9.30 மணிவரை வைத்திய கலாநிதி வை. தியாகராசா தலைமையில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்குவார். (க)



## சாயி சிந்தனை

தீய எண்ணங்களை எப்போதும் உங்களுக்குள் நுழைய விடாதீர்கள். ஒரு தடாகத்தில் தாமரை மலர்ந்திருக்கிறது. அதே தடாகத்தில் இரத்தத்தை உறிஞ்சும் அட்டை போன்ற பூச்சிகளும் வாழ்கின்றன. தாமரை தண்ணீர் இன்றி வாழாது. அதேபோன்று மனித வாழ்க்கையும் அன்பின்றி வாழ முடியாது. ஆகவே உங்களது அன்பான இதயத்தில் வெறுப்பு, கவலை என்ற அட்டைப் பூச்சிகளை வளரும்படி செய்யக் கூடாது.

தண்ணீர்ப் பரப்பின் மேல் நீங்கள் படகில் சொல்லலாமே தவிர படகினுள் நீர் நிறைய அனுமதிக்கக் கூடாது. அதுபோல உலகியலான விஷயங்களின் மேல் பற்றுதல் என்கிற நீர் உங்கள் வாழ்க்கைப் படகினுள் நுழைந்து பாழ்படுத்த விடக்கூடாது.

(ஆதாரம்: சாயி அருளமுதம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், செப். 30

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு விமானம் மூலம் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் தொடர்ந்து வெளியாகி வருவது தெரிந்ததே.

இம்மாதம் 15 ஆம் திகதி வரைக்கும் அனுமதி வழங்கப் பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

(மேற்கண்ட திகதியில் அனுமதி கிடைத்த சங்கானை, நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த பயணிகளினதும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பயணிகளில் ஒரு பகுதியினரதும் விவரங்கள் 20 ஆம், 21 ஆம் திகதிய உதயனில் பிரசுரமாகின என்பதனை அறியத்தருகின்றோம்.)

**யாழ்ப்பாணம் தொடர்**

(117823ஏ), (117823பி), (117823சி), (117824ஏ), (117830ஏ), (117839ஏ), (117840ஏ), (117840பீ), (117842ஏ), (117843ஏ), (117845ஏ), (117845பீ), (117846ஏ), (117846பி), (117853 ஏ).

(117855ஏ], [117856ஏ], (117856பி], [117857ஏ], [117858ஏ], [117868ஏ], [117864ஏ], [117861ஏ], [117869ஏ], [117873ஏ], [117873பி], [117873சி], 117873டி].

[117876ஏ], [117876பி], [117876சி], [117876 டி], [117877ஏ], [117878ஏ], [117882ஏ], [117891ஏ], [117894ஏ], [117897ஏ), [117899ஏ], (118101ஏ], (118109ஏ). [117899பி], [117902ஏ], (117966சி), (117966பி), (117971ஏ), (117971பி), (117971சி), (117972ஏ), (117982ஏ), (117987ஏ), (117987ஏ), (117993ஏ), (117993பி), (117993பி). [117987பி],

[117908ஏ], [117910ஏ], [117915ஏ], [117917ஏ], [117921ஏ], [117928ஏ], [117942ஏ], [117946ஏ], [117952ஏ], [117952பி], [117956ஏ], [117964ஏ], [117966ஏ].

(117994ஏ), (117997ஏ), (117997பீ), (117998ஏ), (118003ஏ), (118009ஏ), (118009பீ).

(118101ஏ), (118109ஏ), (118111ஏ), (1118111பி], (118113ஏ), (118121ஏ). (118122ஏ), (118128ஏ), (118130ஏ), (118130பி). (118130சி), (118130டி), (118130ஈ), (118131ஏ),

(118131பி), (118131சி), (118131டி), (118132ஏ), (118137ஏ), (118138ஏ), (118141ஏ), (118141பி), (118144ஏ), (118144பி), (118146ஏ), (118151ஏ), (118153ஏ), (118153பி), [118153சி], [118156ஏ), [118160ஏ], [118160பி], [118166ஏ]. [118171ஏ], [118171பி],

[118176ஏ], [118177ஏ], [118178ஏ], [118179ஏ], [118206ஏ], [118210ஏ], [118233ஏ], [118236ஏ], [118237ஏ], [118237பி], [118245ஏ], [118246ஏ], [118246பி], [118246சி], [118246டி], [118247ஏ], [118247பி], [118254ஏ],

[118258ஏ], [118263ஏ], [118265ஏ], [119678ஏ], [119748ஏ], [119907ஏ], [119907பி], [120309ஏ], [120309பி].

(118069ஏ), (118069பீ). (118069பி), (118069சி),

(118070ஏ), (118070பீ), [118071ஏ], [118074ஏ], [11874சீ], [118074டீ]. (118074டி), (118074ஈ), (118074எவ்), (118074ஜி), (11807எச்), (118076ஏ), (118077ஏ), (118081ஏ), (118081பீ), (118081சீ), (118081டீ). (118081ஈ), (118083ஏ), (118083பீ), (118083ஏ), (118084ஏ), (118096ஏ), (118097ஏ), (118100ஏ.).

**கரவெட்டி**

(109955 ஏ), (106843 ஏ), (106843 பி), (107001 ஏ), (107001 பி), (101001 சி), (101001 டி), (108035 ஏ), (108035 பி), (110983 ஏ), (111606 ஏ), (111606 பி),

(111658 ஏ), (113334ஏ), (113334 பி), (113335 ஏ), (113399 ஏ), (111411 ஏ), (113411 பி), (113519 ஏ), (113519 பி), (113546 ஏ), (113546 பி), (113546 சி).

(113567ஏ), (113567பி), (113617ஏ), (113617பி), (113620ஏ), (113629பி), (113621ஏ), (113621பி). (113629ஏ), (113629பி), 113629சி), (113648ஏ), (113648பி),

(113648சி), (113648டி), (113648ஈ), (113648எவ்), (113654ஏ), (113654பி), (113654சி), (113654டி), (113663ஏ), (113663பி), (113686ஏ), (113686பி).

(113686 சி), [113688ஏ], (113745 ஏ), (113762 ஏ), [115081ஏ], [115081பி], [115128 ஏ], [115128பி], [115128சி]. [115325 ஏ], [1156358 ஏ], [115360ஏ], [115360 பி],

[115413 ஏ], (115427ஏ), (11544 ஏ], (115453 ஏ), (115453 பி), (115454 ஏ), [115454 பி], [11544சி],

[115464 ஏ], [115473ஏ], [115475ஏ], [118691ஏ], (118696 ஏ], [1189760ஏ], [118773 ஏ], [118773பி]. [118821 ஏ]. [118810 பி), (119038 ஏ).

**ஊர்காவற்றுறை**

[11441ஏ), [11658ஏ), [11852ஏ), [11852பி), [11934ஏ]. [11948ஏ], [11948பி], [11948சி], [11963ஏ], [11971ஏ], [11971பி]. [11979ஏ], [11980ஏ],

[11988ஏ], [12004ஏ]. [12004பி], [12021ஏ], [12025ஏ], [12031ஏ], [12032ஏ], [12032பி], [11032சி], [12038ஏ],

**கோப்பாய்**

[104059ஏ], [104059பி], [110110ஏ], [110110பி], [110167சி], [110167பி], [111017ஏ], [111017பி],

[111089ஏ], [111197ஏ), [116305ஏ], [116305பி], [116330ஏ], [116340ஏ], [116346ஏ], [116346பி], [116347ஏ], [116347பி], [116387ஏ], [116387பி],

[116414ஏ], [116421ஏ], [116423ஏ], [116623ஏ], [116636ஏ], [116636பி], [116636சி]. [116636டி], [116641ஏ], [116644ஏ], (116646ஏ], [116646டி], [116653ஏ], [116653பி],

[116653சி], [116653டி], [116653ஈ]. [116653எவ்], [116711ஏ] [116711பி], [116711சி), [116808ஏ], [116808பி], (116808சி), (116808டி), (116813ஏ). (116813பி), (116954ஏ]. [116964ஏ). (116964பி), (117489ஏ).

**மருதங்கேணி**

(116437 ஏ),(116444 ஏ), (116444 பி), (119110 ஏ), (085085)ஏ, (085085 பி), [085086 ஏ],(085086)பி,

**நல்லூர்**

(099436 ஏ), (099436 பி), (104211 ஏ). (104223 ஏ), (104273 ஏ), (104315 ஏ), (104338 ஏ), (104355 ஏ), (104372 ஏ), (104374ஏ), (107782 ஏ), (109806 ஏ), (109870 ஏ), (109972ஏ), (109987 ஏ). (110183 ஏ), (110205 ஏ), (110210 ஏ),

(110218பி), (110220ஏ), (110232ஏ), (110249ஏ), (110290ஏ), (110291ஏ), (110292ஏ), (110294ஏ), (116325ஏ), (116366ஏ), (116366பி), (116373ஏ), (116377ஏ), (116378ஏ), (116390ஏ), (116390பி), (116390சி),

[117476ஏ], [117478ஏ], [117487ஏ], [117490ஏ], [117611ஏ], [117624ஏ], [107062ஏ], [107062பி], [112465ஏ]. [115845ஏ], [115894ஏ], [116119ஏ], [116166ஏ], [116187ஏ], [117783ஏ] [117808ஏ].

(117819ஏ), (117884ஏ), (117884பி), (117901ஏ), (117903ஏ), (117903பி), (117954ஏ), (117955ஏ), (117970ஏ), (118154ஏ), (118154பி), (118238ஏ), (118258ஏ).

(091840ஏ), (106088ஏ), (108860ஏ), (111910பி), (114768ஏ), (114768பி), (114872ஏ), (114872பி), (114945ஏ), (117094ஏ), (117117ஏ), (117117பி), (117141ஏ).

[117158 ஏ),[117192 ஏ], [117192 பி], [117207 ஏ], [117213 ஏ], [117214 ஏ], [117215 ஏ], [117215 பி], [117229 ஏ], [117229பி], [117229 சி], [117250 ஏ], [117250 பி],

[117276ஏ], [117291 ஏ], 117332 ஏ], [117348 ஏ), [117404 ஏ], [117451 ஏ].

**பளை**

(116375ஏ), (116433ஏ), (116433பி), (116434ஏ), (116434பி). (116436ஏ), (116436பி), (116448ஏ), (116448பி), (085087ஏ), (085087பி), (085087சி), (085087டி), (085087ஈ (085088ஏ).

**பருத்தித்துறை**

(106926 ஏ), (107972 ஏ), (108705 ஏ), (108705 பி), (111587 ஏ), (111587 பி), (113582 ஏ), (113682 ஏ), (113682 பி), (113697 ஏ), (113727 ஏ), (113727 பி), (115079 ஏ), (115082 ஏ), (115082 பி).

(115209 ஏ), (115209 பி), (115209 சி), (115824 ஏ), (115333 ஏ), (115445 ஏ), (115544 ஏ), (118677 ஏ), (118712 ஏ), (118838 ஏ), (118856 ஏ), (118869 ஏ), (118912 ஏ).

[118984 ஏ], [119000 ஏ], [119000 பி), [119009 ஏ], [119009 பி], [119107 ஏ], [119107 பி], [119107 சி], [119114 ஏ], [119115 ஏ], [119116 ஏ], [119116 பி],

**சண்டிலிப்பாய்**

(111112ஏ), (111918ஏ), (112791ஏ), (112791பி), (112924ஏ), (112924பி), (113013ஏ), [113013பி], [113228ஏ], [114385ஏ], [114783ஏ].

[114783பி], [114861ஏ], [114861பி], [114874ஏ], [114874பி], [114965ஏ], [117129ஏ], [117135ஏ], [117140ஏ], [117152ஏ], [117153ஏ], [117161ஏ], [117172ஏ].

[117201ஏ], [117201பி], [117237ஏ], [117239ஏ], [117239பி], [117242ஏ], [117242பி], [117255ஏ], [117259ஏ], [117259பி], [117298ஏ], [117310ஏ]

(117312ஏ), (117313ஏ), (117317ஏ), (117342ஏ), (117342பி), (117343ஏ), (117349ஏ), (117354ஏ), (117354பி), (117362ஏ), (117372ஏ), (117372பி), (117386ஏ).

(117387ஏ), (117417ஏ), (117425ஏ), (118415ஏ), (118417ஏ), (118417பி), (118451ஏ), [144852ஏ].

**தெல்லிப்பழை**

(111906ஏ), (114927ஏ). (114927பி), (114927சி) (116979ஏ), (117321ஏ), (117321பி), (117321சி), (117321டி), (117332ஏ), (117332பி), (117332சி), (117332டி, (117334ஏ), (117334பி), (117334சி).

## பிரதேச செயலக பிரிவு ரீதியாக

# நாளை முதல் முதியோர் வார நிகழ்வு

வலி. கிழக்கு, செப். 30

சர்வதேச முதியோர் தினம் நாளை ஆகும். இதனை ஒட்டி முதியோர் வார நிகழ்வுகள் அடுத்த ஏழு தினங்கள் நடைபெறவுள்ளன. இந்த நாள்களில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்த பிரதேச செயலகங்களின் சமூக சேவைப் பகுதியினர் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் வயது கூடிய முதியவர்கள் தெரிவு செய்யப்பட்டு பொது நிகழச்சியில் அவர்கள் கௌரவிக்கப்பட உள்ளனர்.

முதியோரை கௌரவிக்கும் நிகழ்வுகளில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும் முதியோர் தினத்தை ஒட்டி நடத்தப்பட்டபோட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு வைபவங்களும் இடம்பெற உள்ளன.

இதே வேளை —

நாளை முதல் ஏழு தினங்களுக்கு முதியோர் கொடி வாரமும் அனுஷ்டிக்கப்பட உள்ளது. (ஐ-180-86)

# 'ஏ. ரி. 354' ரக விதைநெல் தற்போது விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 30

யாழ். மாவட்ட கமக்காரர்களின் நன்மை கருதி விவசாயத்திணைக்களத்தின் அனுசரணையுடன் கமநல சேவைத்திணைக்களத்தினால் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட 'ஏ. ரி. 354' ரக விதைநெல் தற்பொழுது விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மூன்றரை மாத கால அறுவடையைக் கொண்ட இந்த நெல்லினம் உவர் மண்ணைச் சகித்து வளரக் கூடியது என்று உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை தெரிவித்தார்.

இந்த நெல்லினைப் பயிரிடுவதன் மூலம் ஏக்கருக்கு 200 புசல் விளைவைப் பெற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-5)

# கட்டடத் திறப்புவிழா

யாழ். நகரில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புனரமைக்கப்பட்ட நடுவப் பணிமனைக் கட்டடம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளது.

யாழ். அரச அதிபர் க. [illegible] கட்டடத்தைத் திறந்து வைப்பார். (ஐ-க)

## இடப்பெயர்வு காரணமாக

# கடமைக்குச் செல்ல முடியாத அரச ஊழியருக்கு விசேட லீவு

கொழும்பு, செப். 30

கடமைக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ள இடம்பெயர்ந்த அரசாங்க ஊழியர்களுக்கு விசேட லீவு வழங்குவதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட லீவில் இருப்பவர்கள் தமது லீவு தினம் முடிவடைந்த பின்னரும் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் காரணமாக குறிப்பிட்ட பகுதிகளுக்கு செல்ல முடியாதிருந்தால் இந்த விசேட லீவுக்கு அவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விசேட லீவு வழங்குவதற்கு முன்னர் குறிப்பிட்ட பகுதியில் உள்ள நிலைமை குறித்து மாவட்ட செயலாளரிடம் இருந்து அறிக்கை ஒன்றை அங்கீகாரம் அளிக்கும் உத்தியோகத்தர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இது சம்பந்தமாக ஏதாவது பிரச்சினை இருக்குமாயின் அவர் பாதுகாப்புச் செயலாளருடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சு மேற்படி விடயங்கள் தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

(ஐ-7)

# கொட்டகைவிழ்ந்தது

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் அமைந்திருந்த தற்காலிக வகுப்பறைக் கொட்டகை நேற்று முன்தினம் பெய்த கடும் மழை காரணமாக சாய்து வீழ்ந்துள்ளது.

இதனால் மாணவர்களின் கல்வி வசதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை —

இராணுவ நடவடிக்கைகளின் போது சேதமடைந்த கல்லூரியின் இரு கட்டடங்கள் இன்னும் புனரமைக்கப் படவில்லை.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 மற்றும் 22 வயதுப் பிரிவுகள்:

# மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிகளில் இடம்பெறும் வீரர் பட்டியல் அறிவிப்பு

யாழ். மாவட்டக் கூடைப் பந்தாட்டச் சங்கம் கடந்த வாரம் நடத்திய தெரிவுப் போட்டிகளை அடுத்து யாழ். மாவட்ட ரீதியிலான 18 வயதுப் பிரிவு, 22 வயதுப் பிரிவு அணிகளில்இடம்பெறும் வீரர்களின் பட்டியலை அறிவித்துள்ளது.

யாழ். மாவட்ட அணியில் இடம்பெறும் வீரர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**22 வயதுப் பிரிவு**

**பற்றீஷியன் வி. க.**

ஏ. எஸ். டிலான், ஜெ. நிறோஷன், எல். கிங்ரன், ஜெ. நிமல்ராஜ்.

**சென். பற்றிக்ஸ்**

ஜே. பொபிஜே.ன்ரன், என். திவாகர்.

**சென்றலைட்ஸ் வி. க.**

ஆர். கண்ணா.

**ஜொலிஸ்ரார்ஸ் வி. க.**

டபிள்யு. கெல்வின், என். குணதர்ஷன்.

**18 வயதுப் பிரிவு**

**சென். ஜோன்ஸ்**

ஏ. பி. தேவநிமலன், பி. ஜொனிவோல்ட்.

**சென். ஜோன்ஸ்**

ரி. கௌரிபாகன், கே. பிரகாசன்.

**ஜொனியன்ஸ் வி.க.**

எஸ்.அமிழ்தன், ரி. காண்டீபன், என். சிவாகரன்.

**சென்றல்**

ஏ. நியூட்ரன்,பி.கேதீஸன், குகராஜ், ஆர். ரட்ணம், ரி. ரஜீவ்.

**ஜொனியன்ஸ் வி.க.**

டி.தேவதர்ஷன்,ரி.காண்டீபன், எஸ். தேவநிறோஷன்.

**யாழ்ப்பாணக் கல்லூரி**

எஸ். முத்துக்குமார், ஆர். இராஜேஸ்வரன்.

**ஹாட்லி**

ஜி.அருணன், ரி. ஆனந்தசங்கர், பி. கேசவன்.

**சென். பற்றிக்ஸ்**

ஆர்.தேவராஜன், சி.பானுஜன், ஜே அன்ரனைன்ஸ்.

இந்த வீரர்களை நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்துக்கு சமுகமளிக்குமாறு யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத் தலைவர் டி.மதியழகன் கேட்டுள்ளார்.

# விளையாட்டரங்கு

## நைரோபியில்

# இந்திய அணி வென்றது

நைரோபி, செப். 30

நைரோபியில் நடைபெறும் நான்கு நாடுகள் பங்குபற்றும் எல். ஜி. கிண்ணத்துக்கான சர்வதேச ஒருநாள் போட்டிகளில் நேற்று இந்திய அணி கென்யா அணியை 58 ஓட்டங்களால் வென்றது.

நாணயச் சுழற்சியில்வெற்றி பெற்ற கென்யா அணித்தலைவர் மொறிஸ்ஒடும்பே இந்திய அணியை முதலில் துடுப்பாட அழைத்தார். இந்திய அணியின் ஆரம்ப ஆட்டமும் கென்யா அணியின் ஆரம்பப் பந்துவீச்சும் அற்புதமான களத்தடுப்பும் ரசிகர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது.

32 ஆவது பந்துப் பரிமாற்றத்திலேயே இந்திய அணி தனது சதத்தை எட்டியது. ஆரம்பத் துடுப்பாட்டக்காரர் சடகோபன் ரமேஷ் தனது முதல் ஓட்டத்தை எடுக்க முகம்கொடுத்த பந்துகளின் எண்ணிக்கை 30 உம் அவரது அரைச்சதத்தைப் பூர்த்தியாக்க முகம்கொடுத்த பந்துகளின் எண்ணிக்கை 117 உம் ஆகும்.

மத்தியவரிசைத் துடுப்பாட்டக்காரர்களது சிறப்பான ஆட்டத்தினாலும் முக்கியமாக் புதிய ஆட்டக்காரர் விஜய் பரத்வாச் ஆட்டமிழக்காது 30 பந்துகளில் பெற்ற 41 ஓட்டங்களாலும் இந்திய அணி மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது பந்து வீச்சில் கென்யா அணி சார்பில் ஒடும்பே 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கென்யா அணி இந்திய அணியின் ஆரம்பப்பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சில் திணறிப் போனது. சகலதுறை ஆட்டக்காரர் விஜய் பரத்வாஜ் உட்பட பிரசாத், மொஹாண்தி ஆகியோரும் சிறப்பாகப் பந்து வீசினர். கென்யா அணி தனது 50 ஆவது ஓவரின் கடைசிப் பந்தில் தனது கடைசி விக்கெட்டையும் இழந்ததன் மூலம் 162 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

நாளைய ஆட்டத்தில் தென் ஆபிரிக்க அணி கென்யா அணியை எதிர்த்து விளையாடும்.

[இ-ரி]

## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப். 30

யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் 'உதயன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று யாழ். கரப்பந்தாட்டச் சங்கத்தின் நல்லூர் மைதானத்தில் இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3 00மணிக்கு— ஐக்கிய வி.க. (கே.கே.எஸ்.) எதிர் ஆவரங்கால் மத்திய வி.க.

★ 4 மணிக்கு—பாரதி வி. க. எதிர் விக்னேஸ்வரா வி.க.

(இ-ரி)

## இலங்கைக்கு 32 பதக்கங்கள்

காட்மண்டு, செப். 30

காட்மண்டுவில் நடைபெறும் எட்டாவது தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் (சாவ்) ஐந்தாம் நாளான நேற்றுடன் இலங்கை 32 பதக்கங்களைப் பெற்றது. இவற்றில் 11 தங்கம், 11 வெள்ளி, 10 வெண்கலம் என்பன அடங்குகின்றன.

நேற்று நடைபெற்ற போட்டிகளில் இலங்கை 400 மீற்றர் ஆண்களுக்கான தடைதாண்டல் ஓட்டத்திலும் ஆண்களுக்கான 4X400 மீற்றர் அஞ்சலிலும் தங்கம் பெற்றது.

பதக்கப்பட்டியலில் இந்தியா, நேபாளம் ஆகியவற்றுக்கு அடுத்து மூன்றாவது நிலையிலேயே தொடர்ந்து இலங்கை இருந்து வருகின்றது.

[உ-ரி]

## ரூபவாஹினியில் இன்று

இலங்கைக் கிரிக்கெட் பயிற்சியாளர் சங்கப் பிரதிநிதி லயனல் மெண்டிஸ்கடந்த வாரம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு வழங்கிய கிரிக்கெட் பயிற்சி தொடர்பான விவரணம் இன்று பிற்பகல் 5.10 முதல் 5.40 வரை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முதலாவது அலைவரிசையில் ஒளிபரப்பாகும். என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-ரி)

## இலங்கை - ஆஸி.

# 3 ஆவது ரெஸ்ட் இன்று; ஆனால் மழை விடுமா?

கொழும்பு, செப். 30

இலங்கை — ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்றாவது இறுதி கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டம் இன்று கொழும்பு எஸ். எஸ். ஸி. மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. ஆனால் இன்றைய ஆட்டத்துக்கு மழை இடங்கொடுக்குமா என்பது நேற்றிரவு வரை பெரும்பாலும் சந்தேகமாகவே இருந்தது.

நேற்று கொழும்பில் பரவலாக மழை பெய்தது. அது தொடராமல் — இன்று மழை விடுமானால் — டெஸ்ட் போட்டி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் வானிலை அறிக்கைகள் இன்றும் மழை பெய்வதற்கான சாத்தியம் அதிகம் என்று தெரிவித்துள்ளன.

தற்போதைய நிலையில் ஆட்டம் ஆரம்பமானால் ஆடுகளம் ஆரம்ப நாள்கள் வேகப் பந்து வீச்சாளர்களுக்கும், துடுப்பாட்ட வீரர்களுக்கும் சாதகமாக இருக்கும் என்றும்—

போகப்போக பிந்திய நாள்கள் சுழல் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக அது மாறும் என்றும் — தெரிவிக்கப்படுகின்றது

இந்த டெஸ்ட் தொடரில் முதல் ஆட்டத்தில் இலங்கை வென்றதும் —

இரண்டாவது ஆட்டம் மழை காரணமாக சமனிலையில் முடிவுற்றதும் குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்டம்

வடமராட்சி, செப். 30

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம், ஈ. ஆர். போக்குவரத்துச் சேவை நிறுவனத்தின் ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தி வரும் வடமராட்சி ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திக்கம் மூனை மைதானத்தில் இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ மாலை 4 மணிக்கு — நியூட்டன் வி. க. எதிர் டயமன்ஸ் வி. க.

★ மாலை 5 மணிக்கு — கருணாகரன் வி. க. எதிர் நக்கீரன் வி. க. (இ-ரி)

★ ★ ★

வடமராட்சிக் கல்வி வலையப் பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

**16 வயதுப் பிரிவு**

★ உடுப்பிட்டி அ. மி. க. பாடசாலை எதிர் இமையாணன் அ.த.க. பாடசாலை (நெல்லியடி ம.ம.வி. மைதானத்தில்).

★ வல். சிவகுரு வித்தியாலயம் எதிர் பொன்னம்பலம் ம. வித்தியாலயம் (திக்கம் மைதானத்தில்).

**18 வயதுப் பிரிவு**

★ உடுப்பிட்டி அ. மி. க. பாடசாலை எதிர் இமையாணன் அ.த.க. பாடசாலை (நெல்லியடி ம.ம.வி. மைதானத்தில்).

★ தேவரையாளி இ. கல்லூரி எதிர் அல்வாய் ஸ்ரீலங்கா ம. வி. (திக்கம் மைதானத்தில்). (இ-ரி)

# தீவகப் பாடசாலைகளில் நாளை முதியோர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், செப் 30

தீவக வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் நாளை வெள்ளிக்கிழமை முதியோர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

காலையில் பிரார்த்தனையைத் தொடர்ந்து முதியோர் கீதம் இசைக்கப்படும் எனவும்—

பின்னர் முதியோரைப் பாதுகாத்தல், முதியோரை மதித்து நடத்தல் என்ற பொருளில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும் என்றும்—அவர் மேலும் தெரிவித்தார்.

# முதியோர் தினத்தை ஒட்டி நல்லூரில் நடை பவனி

யாழ்ப்பாணம், செப். 30

யாழ். செயலகத்தின் ஏற்பாட்டில்சர்வதேச முதியோர் தின நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அன்று காலை 8 மணிக்கு திருநெல்வேலி முத்துமாரியம்மன் கோயில்முன்றலில்ஒன்று கூடும் வயோதிபர்கள் நடை பவனியாக மணி மண்டபத்தை அடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

அதைத்தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள், சிற்றுண்டி வழங்கல், முதியோருக்கு பரிசில் வழங்கல் ஆகியன இடம்பெறும். [இ-3-5-க]

## விருது வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், செப் 30

இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் நினைவான 'சம்பந்தன்' விருது வழங்கும் வைபவம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் கலாநிதி க. குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

1998 ஆம் ஆண்டுக்கான சம்பந்தன் விருதினை பேராசிரியர் அ. சண்முகதாஸ் பெறுகின்றார். அவர் எழுதிய ''தமிழின் பா வடிவங்கள்'' என்ற ஆய்வு நூல் 1998 ஆம் ஆண்டு மிகச்சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்டு இந்த விருதினைப் பெற்றுள்ளது.

தொடர்ந்து ''புனைகதை முன்னோடி சம்பந்தன்'' எனும் தலைப்பிலான நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை பேராசிரியர் நா. சுப்பிரமணியமும் விருது உரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசாவும் நிகழ்த்துவர். [ஐ-க]

## தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், செப் 30

நேற்று காங்கேசன்துறை வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் குடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 90 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டன. (இ-9-139)

## வயோதிபர் விடுவிப்பு

கடந்த 26 ஆம் திகதி மட்டுவில் தெற்கில் கைதான வயோதிபர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டு விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. முருகன் வயிரவன் என்பவரே விடுவிக்கப்பட்டவர் ஆவார். [இ 9-5-8]

## கிணற்றில் தவறி வீழ்ந்த பெண் மரணம்

யாழ்ப்பாணம், செப். 30

சங்கானைப் பகுதியில் கிணற்றில் தவறி வீழ்ந்த பெண் ஒருவர் நீரில் மூழ்கி மரணமான சம்பவம் ஒன்று கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது

தெய்வேந்திரம் சிவபாக்கியம் [வயது 48] என்ற பெண்ணே மரணமானவராவார். [இ-3-139-க]

# மிதிவெடி எனத் தெரிந்துகொண்டும் அதை மிதித்த சிறுவன் கால் இழப்பு

யாழ்ப்பாணம், செப். 30

மிதிவெடி எனத் தெரிந்து கொண்டும் அதனை மிதித்துப் பார்த்த சிறுவன் வலதுகாலை முழங்காலுக்குக்கீழ் இழந்து படுகாயமடைந்தார்.

மாதகல் நுணசை வீதியில் நேற்றுக்காலை 10 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சேகர் ஜீவகுமார் (வயது 12) என்பவரே படுகாயம் அடைந்தவராவார்.

பனங்காணி ஒன்றினுள் சிறுவர்களுடன் பனங்கொட்டை பொறுக்கச் சென்றவேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறிய அச்சிறுவன் மற்றைய சிறுவர்கள் மிதிவெடியைக் கண்டு தன்னிடம் கூறியதாகவும் அதனைத் தான் கல்லால் எறிந்து பார்த்தபோது அது வெடிக்காததால் அதனைக் காலால் மிதித்துப் பார்த்ததாகவும் மிதித்த காலை எடுத்தவேளை அது வெடித்ததாகவும் அந்தச் சிறுவன் மேலும் தெரிவித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நேற்றைய வீடியோ CD வெளியீடு

ஜோடி

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்

(சி/9129)

எமது வீடியோ CD வெளியீடு

() அன்புள்ள காதலுக்கு

() ஜோடி

அடுத்த புதிய வெளியீடு கார்த்திக் - ரம்பா நடித்த

() உனக்காக எல்லாம் உனக்காக

சுப்பஸோ வீடியோ

149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,

(சி/9130)

இன்றைய ஓடியோ CD வெளியீடுகள்

- ஊட்டி
- மானசீக காதல்
- உனக்காக எல்லாம் உனக்காக
- நேசம் புதுசு
- தடையப்பா (Remix)

மூர்த்தி வீடியோ சென்ரர்

மானிப்பாய்

(சி/9128)

WE HAIL

Mr. Rajoo's Son ROHAN

On His Appointment As

"JUSTICE OF PEACE"

We wish him to become an Indefatigable Crusader for Peace.

Well - Wishers from Chavakachcheri

RAJAN

Goodwill,

CHAVAKACHCHERI.

(சி/9121)

கரம்பொன் இளைஞன் கொலை

# ஈ.பி.டி.பி அமைப்பாளர் ஜெகன் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்

ஊர்காவற்றுறை கரம்பொன் பகுதியில் கடந்த மே மாதம் இடம்பெற்ற இளைஞன் ஒருவனின் மரணம் தொடர்பாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர்கள் சார்பாக அந்த அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி, கே. ஜெகன் நேற்று நீதிமன்றத்தில் ஆஜரானார்.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் நேற்று எடுக்கப்பட்டசமயமே அவர் ஆஜரானார்.

இந்த வழக்கின் பிணையாளியான எஸ். சிறீ என்பவரை அடுத்த மாதம் 6ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதாக அவர் நீதிவானிடம் தெரிவித்தார்.

இந்த வழக்கில்குற்றஞ்சாட்டப்பட்டுள்ள காராளசிங்கம் பாட்ஷா. வெற்றிவேலு செல்வராசா ஆகியோர் தமது அமைப்பில் இருந்து விலகிவிட்டனர் என்றும்— அவர்கள் தொடர்பான விவரங்களைப்பெற்று அடுத்த மாதம் 27 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும்ஜெகன் நீதிவானிடம் சொன்னார். (இ-3-5)

## கதிர்காமர்...

[முதலாம் பக்கத் தொடர்]

இலங்கை சுதந்திரம் அடைந்து 51 வருட கால வரலாற்றில் தமிழர் பிரச்சினை நீண்டுகொண்டே போகின்றது. 3ஆம் தரப்பு ஒன்று இந்த விடயத்தில் சம்பந்தப்படாமல் தீர்வு காண முடியாது. இந்த நிலையில் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ள கருத்து ஏற்கமுடியாததொன்று — என்று தெரிவித்துள்ளார். (இ-3)

## பிரிட்டிஷ்...

[முதலாம் பக்கத் தொடர்]

யோகம் இல்லாத பிரதேசங்களில் இந்த புதிய ஜெனரேட்டர்கள்பொருத்தப்படும்.

அதே நேரம் — பிரிட்டிஷ் அரசு வழங்கியிருந்த 6 ஆயிரம் மின்மானிகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன என்றும் —

மின்மானிகள் இல்லாத பாவனையாளர்களுக்கு அவற்றை பொருத்தும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் — அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். [இ-3]

## சிறுவர்தின விழா

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய சிறுவர்தின விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி), த. அருணகிரிராஜா பிரதம விருந்தினராகவும், மக்கள் வங்கி வடவலய உதவிப் பொது முகாமையாளர் கே. திருநாவுக்கரசு சிறப்பு விருந்தினராகவும்லந்துகொள்வர்.

வித்தியாலயத்தின் சிறுவர் தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்களும் நாளை இடம்பெறும்.

15 வயதுப் பிரிவில் வேம்படி மகளிர் கல்லூரியை எதிர்த்து வட-இந்து மகளிர் கல்லூரியும்—

13 வயதுப் பிரிவில் வேம்படி மகளிர் கல்லூரியை எதிர்த்து திருக்குடும்ப கன்னியர்மடம் வித்தியாலயமும்— மோதவுள்ளன. (-3-க)

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

வந்து சேர்ந்தார்.

பின்னர் அவர் அங்கிருந்து பஸ்ஸில் பயணம் செய்து தமது அலுவலகத்துக்குச் சென்று அங்கு செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:-

"இனப்பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கக்கூடிய தீர்வை அரசு முன்வைக்க வேண்டும்.

அது தொடர்பாக எனக்கு ஜனாதிபதி கடிதம் அனுப்பினால் லியம் பொக்ஸ் உடன்படிக்கையின்படி அவருக்கு நான் ஒத்துழைப்பு வழங்குவேன்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கக்கூடிய காலம் இதுதான். இதைப்பயன்படுத்தி பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் அதற்கு நாம் ஒத்துழைப்பாக செயற்படுவோம்"— என்றார். (இ-3)

## நூலகம் திறப்பு

வலிகாமம் தெற்கு, செப். 30

சுன்னாகம் பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலக பொது நூலகம் அண்மையில் சுன்னாகம் பிரதேச சபைத் தலைவர் தி. மா. செல்வராசாவினால் திறந்துவைக்கப்பட்டது.

இந்தப் பொது நூலகத்துக்கு ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியுள்ள நூல்களும் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களின் நலன்கருதி உயர்தர வகுப்புகளுக்கு உரிய விஞ்ஞானம், கலை சம்பந்தப்பட்ட சுமார் 150 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் கடந்த கால வினா விடைப் புத்தகங்கள், நூலகப் பொறுப்பாளர், உதவியாளர் போன்றோரும் விரைவில் நியமனம் செய்யப்பட உள்ளனர். [ஐ-152]

## வடமராட்சியில் இடம்பெயர் சேவை

யாழ்ப்பாணம், செப். 30

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை தொடர்பான இடம் பெயர் சேவை இன்று வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இடம் பெயர் சேவையில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகள் கலந்து கொள்வர். (இ-118)

## காங்கேசனில்...

(முதலாம் பக்கத் தொடர்)

காங்கேசன்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 3 பெண்கள் உட்பட ஐவர் கடந்த 17 ஆம் திகதி அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும்—

அவர்களில் 3 பெண்களும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார்.

அதேநேரம்— நல்லூர் நாயன்மார்கட்டைச் சேர்ந்த யோகநாதன் பிறேமானந்தன் (வயது 28) என்பவர் நேற்று முன்தினம் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனிதஉரிமைஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இளைஞனை காணவில்லை

யாழ்ப்பாணம், செப். 30

உரும்பிராய் கிழக்கில் கடந்த 25ஆம் திகதி தொடக்கம் இளைஞர் ஒருவர் காணாமல் போய்விட்டார் என மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அழகரட்ணம் பிறேம்ராஜா (வயது 20) என்ற இளைஞரே காணாமல் போய்விட்டார் என அவரது உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது..

## நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம். செப் 30

காங்கேசன் துறையிலிருந்து திருகோணமலைக்கு எதிர் வரும் 6ஆம் திகதி இடம் பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த - செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை ஒருநாள் முன்னதாக எதிர் வரும் 5 ஆம் திகதி இடம் பெறவுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார், (இ-9-139)

## தென்னங்கன்று இலவசமாக வழங்கப்படும்

பளையில் தென்னை அ... விருத்திச் சபையினால் நடு... செய்யப்பட்ட தென்ன... நாற்றுகளில் 10ஆயிரம் தென்னம் நாற்றுகள் பொதும... களுக்கு இலவசமாக வழங்க... படவுள்ளதாக சபையி... உத்தியோகத்தர் ஒருவ... தெரிவித்தார்.

தற்பொழுது 19 ஆயிரம் தேங்காய்கள் நாற்றுக்காக போடப்பட்டுள்ளதாகவும் இவை முளைத்த பின்னர் இவற்றிலிருந்து 10 ஆயிரம் நாற்றுகள் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது .(ஐ-5)

## பதுளையில்...

[முதலாம் பக்கத் தொட...

களைக் கைது செய்து த... வைத்து விசாரணை நட... வருகின்றனர்.

பசறைத் தோட்டப் பகு... யில் பொலீஸார் தீவிர தே... தல்களை மேற்கொண்டுள்ளனர். (இ-3...)

## லங்காமுடித்த...

(முதலாம் பக்கத் தொடர்)

ரயில் நிலையப் பகுதிக்கு வருமாறும் அவர் கேட்டுள்ளா...

கப்பலில் பயணம்செய்யும் பயணி ஒருவர் 50 கிலோ எ...யுள்ள பொருள்களைத் தம்முடன் எடுத்துச் செல்ல முடி... என்றும் —

எனினும் ஒரே விதமான நுகர்ச்சிப் பொருளில் 5 கிலோவுக்கு மேல் எடுத்துச் செல்ல முடியாது என்றும் அவர் தெ...வித்தார். (இ-...)

## தேசிய துணைப்...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும்—தேசிய துணை... படையினர் தெரிவித்தனர்.

தாயும், மகளும் தவறுதலாகவே உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)

அனேக அதிபர், ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்க

அதிபர் போட்டிப் பரீட்சைக்கான

மாபெரும் இறுதி வழிகாட்டல் கருத்தரங்கு

இடம்:- யாழ். இந்து மகளிர் கல்லூரி

காலம்:- 03 - 10 - 99 ஞாயிறு காலை 8.30 மணி

- கல்விபுலம் சார் நிபுணர்களின் மிக முக்கிய விரிவுரைகள் – 06
- இலவச அச்சடித்த பெறுமதிவாய்ந்த குறிப்புக்கள். (பொது அறிவு, கிரகித்தல், கல்வி நிர்வாகம்)
- மாதிரி வினாப் பத்திரங்கள் – விடை எழுதுவதற்கான கலந்துரையாடல்கள்.

உரியவர்கள் அனைவரையும் பங்குபற்றிப் பயன் பெறுமாறு அழைக்கின்றோம்.

GRADUATE TEACHE PROFESSIONAL DEVELOPMENT ORGANIZATION

திரு. பா. தனபாலன்
தலைவர்

திரு. ஏ. சி. ஜோர்ஜ்
செயலாளர்

(69460)

சுனில் ஆட்ஸ்

- Photo Chrome
- Acme
- Photo prints
- Colour Chrome

நீங்கள் விரும்பும் Colour lab இல் கழுவிப் பெற்றுக்கொள்ளலாம்

21-09-99 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கலர் படச்சுருள்களுக்கான படங்கள் வந்துவிட்டன

சுனில் ஆட்ஸ்

272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/9127)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30-09-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org